
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜனவரி 2008
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

## குஜராத் பாசிசத்தை தேர்ந்தெடுத்தது ஏன்?



படிப்பகம்

www.padippakam.com

# தஸ்லிமா நஸ்ரீன்:
# அபலையைத் துரத்தும் இசுலாமிய மதவெறி!

1994-ஆம் ஆண்டு, வங்க தேசத்தின் இளம் மருத்துவரும் எழுத்தாளருமான தஸ்லிமாவின் 'லஜ்ஜா' (அவமானம்) நாவல் வெளியாகிறது. நாவலில் பாபரி மசூதி இடிப்பையொட்டி வங்கதேசத்தில் சிறுபான்மை இந்துக்கள் முசுலீம் வெறியர்களால் தாக்கப்படுவதை கண்டித்து எழுதும் தஸ்லிமா, கூடவே பெண்களை இசுலாத்தின் பெயரால் அடிமைப்படுத்துவதை எதிர்த்தும் பேசுகிறார். ஆத்திரமடையும் மதவெறியர்கள் அவரது தலையைக் கொண்டு வருபவர்களுக்கு பரிசு என 'பத்வா' அறிவிக்கிறார்கள்.

இதற்குத் தோதாக இசுலாத்தை அரச மதமாக அறிவித்திருக்கும் வங்கதேச அரசும் அவர் மீது மத உணர்வைப் புண்படுத்தியதாக வழக்குப் போடுகிறது. அநீதியால் சூழப்பட்டு ஆதரவில்லாத நிலையில் துயறுற்ற தஸ்லிமா இறுதியில் நாட்டை விட்டு வெளியேறித் தனக்கு தஞ்சமளித்த ஸ்வீடன் நாட்டுக்கு புலம் பெயர்கிறார்.

இருப்பினும் சொந்த மண்ணின் வாசனையிலுருந்து துண்டிக்கப்பட்ட மேற்கத்திய வாழ்க்கை அவருக்கு உவப்பளிக்கவில்லை. அதே சமயம் தாய்நாட்டிற்கு திரும்பவும் வழியில்லை. ஆனால், தனது தாய்நாட்டின் பண்பாட்டுச் சூழலையொத்த மேற்கு வங்கத்தில் வாழ்வதற்கு தஸ்லிமா விரும்பினார். அதன்படி, 2002-ஆம் ஆண்டு கல்கத்தா திரும்பினார்.

மத்தியில் ஆளும் காங்கிரசு கூட்டணி அரசு, இந்தப் பெண்மணியைத் தொந்தரவாகக் கருதுவதால் இன்றுவரை அவருக்குக் குடியுரிமை வழங்கவில்லை. அவ்வப்போது விசாவை மட்டும் நீட்டித்து வருகிறது. இந்தியா வந்த தஸ்லிமா, தனது சுயசரிதையை மூன்று பாகங்களாக வெளியிட்டுள்ளார். 'அதில் நபிகள் நாயகத்தை காமுகர் என்று வருணித்து விட்டார்' என்பதுதான் இசுலாமிய அமைப்புக்களின் தற்போதைய கோபம். அதனால் அவரை இந்தியாவை விட்டு விரட்டவேண்டும், என்று போராடுகிறார்கள்.

இசுலாமிய அமைப்புக்கள் தஸ்லிமாவை கட்டோடு வெறுக்கும் வண்ணம், அவர் அப்படி என்னதான் கூறிவிட்டார்?

குர்ஆன் உள்ளிட்ட அனைத்து மத நூல்களும் காலப்பொருத்தமற்றவை என்றும், அவை காலாவதியாகி விட்டன என்றும், தான் பிறந்த இசுலாம் மதம் எப்படி பெண்களை அடிமைப்படுத்துகிறது? என்பதையும் விரிவாகப் பேசியும், எழுதியும் வரும் தஸ்லிமா மதங்களுக்குப் பதில் நாம் மனிதநேயத்தையே புதிய நம்பிக்கையாக கொள்ள வேண்டும் என்கிறார். 2002-இல் வெளியிடப்பட்டிருக்கும் அவரது சுயசரிதை நூல்களில், தனது குடும்பத்தின் ஆண் உறவினர்களால் தான் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் பட்டதைப் பதிவு செய்திருக்கும் நஸ்ரீன், இத்தகைய போக்கு நபிகள் காலத்திலேயே இசுலாம் மதத்தில் இருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

இதனாலேயே நஸ்ரின் பல ஆண்களுடன் உறவு கொள்ளும் ஒரு பெண்ணியவாதி என்றும், நபிகள் நாயகத்தை 'காமுகர்' என்று தூற்றுவதாகவும், இசுலாமிய மதவாதிகள் அவதூறு செய்கின்றனர். இதன் பொருட்டே, ஹைதராபாத் நகரில் ஆகஸ்டு மாதம் நடந்த நூல் வெளியீட்டு விழாவில், மஜ்லீஸ் கட்சியினரால் தஸ்லிமா தாக்கப்பட்டார். நவம்பர் மாதம் கல்கத்தா நகரில் அனைத்திந்திய சிறுபான்மை பாதுகாப்பு அமைப்பு, 'அவரை வெளியேற்ற வேண்டும்' என்று ஒருநாள் முழுக்க கலவரம் ஒன்றை நடத்தியது.



தஸ்லிமாவின் 'இசுலாம் குறித்த விமரிசனங்கள்' ஒரு அறிவுஜீவியின் மேட்டிமைத்தனத்திலிருந்து வருபவையல்ல. அது, ஒரு பெண் என்ற முறையில் அவர் அனுபவித்த வலியிலிருந்து எழுபவை. இசுலாத்தில் தன்னையொத்த பெண்கள் படும் அவஸ்தையிலிருந்து, அவர்கள் விடுதலை அடையவேண்டும் என்ற சமூக அக்கறையிலிருந்து அவர் பேசுகிறார்.

எல்லா ஓட்டுக் கட்சிகளாலும் கைவிடப்பட்ட நிலையிலும், ஒவ்வொரு நகரமாக துரத்தப்பட்ட போதிலும், தஸ்லிமா தனது கருத்துக்களில் உறுதியாகவே இருக்கிறார்.

தஸ்லிமா இசுலாத்தில் பிறந்த ஒரு பெண் என்பதால், அவரது நேர்மையான விமரிசனங்களைக் கூட முசுலீம் மதவெறியர்களால் சகிக்க முடியவில்லை. ஆகவே அவரது கேள்விகளுக்குப் பதிலளிக்க வக்கற்றவர்கள், அவரைக் கொல்ல வேண்டுமென்பதிலும், நாடுகடத்த வேண்டுமென்பதிலும் குறியாயிருக்கிறார்கள்.

பார்ப்பன இந்துமதவெறிப் பாசிச அபாயத்தை கடந்த பதினைந்து ஆண்டுகளாக நாம் பிரச்சாரம் செய்து வந்ததையும், அதை எதிர்த்து நடத்திய போராட்டங்களையும், இயக்கங்களையும் இசுலாமிய மக்கள் அறிவார்கள். சொல்லப் போனால் ம.க.இ.க-வின் அறிமுகமே பல இசுலாமிய நண்பர்களுக்கும், இயக்கங்களுக்கும் இதன் மூலமே நடந்திருக்கிறது. அப்போது மகிழ்ச்சி கொள்ளும் இவர்கள், இசுலாமிய பிற்போக்குத் தனத்தை நாம் அம்பலப்படுத்துவதை விரும்புவதில்லை.

எந்த மதச்சார்பற்ற ஜனநாயக உணர்விலிருந்து பார்ப்பன இந்து மத வெறியை அம்பலப்படுத்துகிறமோ, அதே உணர்விலிருந்துதான் இசுலாத்தின் பிற்போக்குத்தனத்தையும் எதிர்க்கிறோம் என்பதும் இவர்களுக்கு புரிவதில்லை. 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற அணுகுமுறை எம்முடையதில்லை. ஆயினும் இசுலாத்தில்

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர் : **25**
- குரல் : **5,6,7,8**
- அக்-டிச.2007, ஜன.2008

உள்நாடு: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச்சந்தா US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.

தொலைபேசி: 044-23718706.
மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

அட்டை வடிவமைப்பு:
ஸ்பார்ட்டகஸ்

# உலகமயத்தின் புத்தாண்டு வக்கிரம்!

அமெரிக்காவில் பணிபுரியும் இரு இந்தியப் பெண்கள், புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக, பல்லாயிரம் ரூபாய்களைச் செலவழித்து மும்பைக்கு வந்து ஓட்டலில் தங்குகிறார்கள். அருகிலிருக்கும் ஜூகு கடற்கரைக்கு தங்கள் கணவர்களுடன் இரவு சென்றபோது, அங்கு ஏற்கனவே மற்றுமொரு நட்சத்திர விடுதியில் நடிகை பிபாஷா பாசுவின் ஆபாச நடனத்துடனும், போதையுடனும் புத்தாண்டைச் சந்தித்துக் கொண்டிருந்த 80 பேர் கொண்ட இளைஞர் கும்பல் இந்தப் பெண்கள் மீது பாய்ந்து, உள்ளாடைகளைக் கிழித்து, சொல்லக் கூசும் பாலியல் வன்முறைகளையும் அரங்கேற்றியது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிக்கை நிருபர், புகைப்படம் எடுத்ததோடு, உடனே போலீசுக்கும் தகவல் கொடுத்தார். காட்டு விலங்குகளிடம் சிக்கி காயம்பட்ட மான்கள் உயிருடன் மீட்கப்பட்டன. இத்தகைய புத்தாண்டு செய்திகளுக்கு பஞ்சமே இல்லை. போதையில் பெண்களைக் கேலி செய்ததற்காக மத்திய அமைச்சர் லாலுவின் மகன்கள் செய்திகளில் அடிபட்டனர். கேரளாவில் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு பெண், அவளுடைய பெற்றோர் முன்னிலையிலேயே வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்.

அதிர்ச்சியளிக்க வேண்டிய இந்தச் சம்பவங்கள், புத்தாண்டின் கிளுகிளுப்பைக் கூட்டும் நோக்கத்திலேயே பத்திரிக்கைகளில் வெளியாகின. புகைப்படங்களை ருசிகரமான முறையில் வெளியிட்டு, புத்தாண்டை இப்படியும் வக்கிரமாக கொண்டாடலாம், என்று பாடம் நடத்தின. சென்ற ஆண்டு, சென்னையில் இப்படித்தான் ஸ்டெப்பானி என்ற பெண் கொல்லப்பட்டார். இந்த ஆண்டும், ஒரு நட்சத்திர ஓட்டலில் நடனமேடை சரிந்ததால், நீச்சல்குளத்தில் விழுந்து 3 பேர் இதுவரை கொல்லப்பட்டிருக்கின்றனர். வெளிச்சத்திற்கு வராத சம்பவங்கள் இன்னும் பல.

இன்றைய தாராளமய யுகத்தில் திருவிழாக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. காதலர் தினம், புத்தாண்டு தினம் முதலான நவீனக் கொண்டாட்டங்கள் முதல் விநாயகர் சதுர்த்தி, தீபாவளி, நவராத்திரி வரையிலான மரபு ரீதியான பார்ப்பனப் பண்டிகைகள் வரை, புதிய மோஸ்தரில் கொண்டாடப்படுகின்றன. இவற்றின் வடிவமைப்பை முதலாளித்துவம் தீர்மானிக்கிறது. நட்சத்திர விடுதிக் கேளிக்கைகள், தொலைக்காட்சி அலைவரிசைகளின் சிறப்புதின நிகழ்ச்சிகள் அனைத்தும் முதலாளிகளால் 'ஸ்பான்சர்' செய்யப்படுகின்றன. ஊடகங்கள் அதை உப்ப வைப்பதோடு, இக்கேளிக்கைகளில் பங்கு பெறாதவர்கள் பத்தாம் பசலிகள், என்ற கருத்தையும் உருவாக்குகின்றன.

தேசம், மதம், மொழி, சாதி முதலான எல்லைகளைக் கடந்து, மனித குலம் முழுவதும் கொண்டாடும் திருவிழாவாக புத்தாண்டு சித்தரிக்கப்படுகிறது. ஆனால் இந்த எல்லைகளைக் கடப்பதன் உண்மையான பயன், முதலாளிகளின் இலாபத்தில் ஒளிந்திருக்கிறது. புத்தாண்டுக்கான 'தள்ளுபடி விற்பனை' அமோகமாக நடக்கிறது. அதை நிலைநிறுத்த ஏனைய கொண்டாட்டங்கள் பயன்படுகின்றன. ஆக நுகர்வுக் கலாச்சார வெறியும், களி வெறியும், அதற்குத் தேவையான பணவெறியும் ஒருங்கே மனித சித்தத்தில் கலக்கப்படுகின்றன. இவற்றை எட்டுவதற்காக ஊழல்படுத்தப்படும் மனம், கொண்டாட்டத்தில் மட்டும் எப்படி 'ஒழுக்கமாக' நடந்து கொள்ள முடியும்?

எத்தகைய அபாயங்கள் இருந்தாலும், அவையெல்லாம் விதிவிலக்குகள் என்பதாக ஊடகங்கள் ஆறுதல் தருகின்றன. 'பாலியல் வன்முறைக்கு, செக்ஸ் கல்விதான் தீர்வு' என்று அறிவு ஜீவிகள் பாடம் நடத்துகிறார்கள்.

ஆனால், இவை எதுவும் தீயை அணைக்கப் போவதில்லை. சமூக உணர்வை புதுப்பிக்கவேண்டிய திருவிழாக்கள், விலங்குணர்ச்சியின் வக்கிர வடிகாலாக மாற்றப்பட்டுவிட்டன. கிரிமினல்கள் எப்போதாவது குற்றங்கள் செய்வார்கள். புத்தாண்டு அன்று, குற்றவுணர்வின்றியே கூட குற்றமிழைக்கும் மனநிலைக்கு, சமூகமே ஆட்படுத்தப்படுகிறது. இதை பாடம் நடத்தியோ, போதனை செய்தோ திருத்த முடியாது. நட்சத்திர விடுதிகளுக்கும், ஏனைய கேளிக்கை மையங்களுக்கும், உருட்டுக் கட்டைகளைத்தான் அனுப்ப வேண்டும். விலங்குகளை அடித்துத்தான் திருத்த முடியும். ●

படிப்பகம்

www.padippakam.com

# குஜராத் பாசிசத்தை தேர்வு செய்தது ஏன்?



“இந்த முகமூடி எனக்கும் மக்களுக்கும் இடையே வலிமையான பிணைப்பை ஏற்படுத்தியது. நான் தாக்கப்பட்ட போதெல்லாம், என் வலியை மக்கள் உணர்ந்தார்கள்.”

*(மோடியின் பேட்டி, டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ், டிசம்பர்-25)*

‘அண்ணனே, தளபதியே, அம்மா, அய்யா’ என்று, தலைவனாகிய ஆண்டவனைத் தொண்டர்கள் தொழுது வழிபடும் ‘துவைத’ நிலையிலிருந்து, ‘அகம் பிரம்மாஸ்மி’ என்ற ‘அத்வைத’ நிலைக்கு, ‘நானே மக்களாக இருக்கிறேன்’ என்ற தூய பாசிச நிலைக்கு, இந்திய ஜனநாயகத்தை உயர்த்தியிருக்கிறார் மோடி.

தனது முகமூடிகளை இலட்சக்கணக்கில் சீனத்திலிருந்து இறக்குமதி செய்து, அவற்றை குஜராத் முழுவதும் விநியோகித்திருந்தார் மோடி. தலைவனை ‘முக’மாகவும், மக்களை வெறும் ‘பிரதிபிம்ப’மாகவும் மாற்றி விட்ட இந்த ‘அத்வைத’ நாடகத்தில், அரசியல் எதிரிகள் மோடியை விமரிசித்த போது, முகமூடிகள் வலியால் துடித்ததில் வியப்பில்லை.

முன்பு, வாஜ்பாயி எனும் ‘மிதவாத முகமூடி’யை அணிந்து கொண்டு பாசிசம் ஆட்சி நடத்தியபோது, அந்த முகமூடியின் மிதவாத ஒப்பனையைப் பாதுகாக்கும் பொறுப்பை, மதச்சார்பற்ற கட்சிகள் ஏற்றிருந்தன. அது பாசிசத்தின் முன்னுரை. இன்று ஒரு கொலைகாரனின் முகத்தைத் தனது முகமூடியாக அணிந்து கொண்டு, ஆனந்தக் கூத்தாடும் குஜராத் நமக்கு வழங்குவது பாசிசத்துக்கான பொழிப்புரை.

முஸ்லிம் இளைஞனை மணந்த இந்துப் பெண்ணின் வயிற்றைக் கிழித்து, சிசுவை எடுத்து எரித்துக் கொன்றதையும், அண்டை வீட்டு முஸ்லிம் பெண்களை பாலியல் வல்லுறவால் சிதைத்து, பின்னர் அவர்களைக் கசக்கிக் கொன்று போட்டதையும், குழந்தைகளைத் தீயில் வறுத்ததையும் பெருமை பொங்க அசைபோடும் கொலைகாரர்களை தெகல்கா படம் பிடித்துக் காட்டியபோது, “இவர்கள் என்ன வகை மிருகங்கள்?” என்று அதிர்ச்சியில் உறைந்து போனார்கள் பல வாசகர்கள். எந்த மண்ணில் அந்தப் பாசிசப் பிராணிகள் முளைத்து, தழைத்து வளர்ந்தனவோ அந்த குஜராத் மண், இந்த முகமூடிக் கூத்தின் மூலம் தன்னுடைய முகத்தை அடையாளம் காட்டியிருக்கிறது.

நீதி, கருணை அல்லது மனிதத் தன்மையின் சாயலையேனும் தமக்குள் காப்பாற்றி வைத்திருக்கும் ஒவ்வொருவரும், தெகல்கா இதழின் செய்தியைப் படித்த பின்னர் ‘எப்படியாவது மோடி தோற்றுவிட மாட்டானா!’ என்று தவித்தனர். தேர்தலுக்கு முந்தைய பல கருத்துக் கணிப்புகள், மோடியின் வெற்றியைத்தான் ஊகித்தன என்ற போதிலும், மோடி தோற்க வேண்டுமென்று ஏங்கினர். ஒருவேளை வெற்றியே பெற்றுவிட்டாலும், மோடியின் ஒரு முடியைக் கூடக் காங்கிரசு பிடுங்கப் போவதில்லை, என்பது தீர்க்கமாகத் தெரிந்திருந்தும், தெகல்கா கிளறிவிட்ட மனப்புண்ணின் ஆறுதலுக்காகவாவது, ‘மோடி தோற்க வேண்டும்’ என்று பலர் விரும்பினர்.

இனப்படுகொலையின் பிணவாடையை முகர்ந்தபடியேதான், குஜராத்தின் பெரும்பான்மை இந்துக்கள் 2002-இல் மோடிக்கு வாக்களித்தனர் என்ற போதிலும், “அது கோத்ரா சம்பவம் தோற்றுவித்த தற்காலிகக் கிறுக்குத்தனமாக இருக்கக் கூடும்” என்று தமக்குத் தாமே சமாதானம் கூறிக் கொண்ட பலர், 5 ஆண்டுகள் கடந்து விட்டதால் குஜராத்தின் இந்து மனோபாவத்திற்கு புத்தி தெளிந்துவிடும் என்றும், அதன் அடிமனதிலிருந்து ‘அறவுணர்ச்சி’ மேலெழும்பி 2002-இன் அநீதிக்குப் பரிகாரம் வழங்கும் என்றும் நம்பிக்கையோடு எதிர்பார்த்தனர்.

தெகல்காவின் பேட்டிகள், இந்த எதிர்பார்ப்பை அதிகப்படுத்தின. இமை தாழாமல், சொல் தடுமாறாமல் தாங்கள் இழைத்த பஞ்சமா பாதகங்களை ‘திரைக்கதை’ போல வருணித்தார்கள் ‘குஜராத்தின் எழுச்சியுற்ற இந்துக்கள்’. ‘மாமிசம் தின்னும் ‘தமோ’ குணம் நிரம்பிய கீழ்சாதி அடியாட்படையின்’ வாயிலிருந்து மட்டுமல்ல, ‘சாக பட்சிணிகளும், இயல்பிலேயே ‘சத்வ’ குணம் நிரம்பியவர்களுமான’ பார்ப்பன-பனியா உயர்சாதி இந்துக்களின் வாயிலிருந்தும் ‘ரத்தக் கவிச்சு’ வீசியது. இருப்பினும், குஜராத்தின் உயர்சாதி இந்துக்கள் மூக்கைப் பொத்திக் கொள்ளவில்லை. பெரும்பான்மை இந்து மனம், அதனைக் கண்டு அவமானத்தால் குறுகி, வெட்கித் தலைகுனியவில்லை. ‘வருந்துகிறோம்’ என்று மனதிற்குள் கூட முணுமுணுக்கவில்லை. முகம் என்ன செய்ததோ, அதையே முகமூடிகளும் பிரதிபலித்தன.

“2002 சம்பவங்களுக்காக வருந்துகிறேன் என்று நீங்கள் ஒரு வார்த்தை கூறினால் அது காயம்பட்ட மக்களுக்கு ஆறுதலாக இருக்குமல்லவா?” என்று ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் நரேந்திர மோடியிடம் கேட்டார் கரண் தாப்பர் என்ற பத்திரிகையாளர். மறுகணமே, அந்தத் தொலைக்காட்சிப் பேட்டியிலிருந்து வெளியேறினார்

**இமை தாழாமல், சொல் தடுமாறாமல் தாங்கள் இழைத்த பஞ்சமா பாதகங்களை ‘திரைக்கதை’ போல வருணித்தார்கள் ‘குஜராத்தின் எழுச்சியுற்ற இந்துக்கள்’. பெரும்பான்மை இந்து மனம், அதனைக் கண்டு அவமானத்தால் குறுகி, வெட்கித் தலைகுனியவில்லை. ‘வருந்துகிறோம்’ என்று மனதிற்குள் கூட முணுமுணுக்கவில்லை.**



படிப்பகம்

www.padippakam.com

மோடி. தெகல்கா பேட்டிகளோ, குஜராத் தொலைக்காட்சிகளிலிருந்தே வெளியேற்றப் பட்டன. பிரதிபலிப்பு தோற்றுவிக்கும் 'இடவல மாற்றம்' என்பது, இதுதான் போலும்!


குஜராத் தேர்தல் முடிவு, காந்திய மத நல்லிணக்கவாதிகளையே கூட அதிர்ச்சியுறச் செய்துள்ளது. ''குஜராத்தை 'இந்துத்துவத்தின் சோதனைச்சாலை' என்று இனிமேலும் அழைக்க முடியாது; அது தொழிற்சாலையாகி விட்டது'' என்கிறார் ஒரு பத்திரிகையாளர். ''குஜராத் ஒரு மாநிலமல்ல, அது ஒரு சித்தாந்தம்'' என்று எச்சரிக்கிறார் குல்தீப் நய்யார். ''இனி இந்தியாவே குஜராத் தான்'' என்று இரண்டு விரலைக் காட்டிக் கொக்கரிக்கின்றன மோடியின் முகமூடிகள்.

அத்வானியின் கூற்றுப்படி, இது பாரதிய ஜனதாவுக்கு ஒரு திருப்புமுனை. இது 'ஆம்பளை ஜெயா'வின் வெற்றி என்பதால், ஜெயலலிதாவைப் பொருத்தவரை இது அவரது சொந்த வெற்றி. ஆளும் கட்சிக்கு எதிராக வாக்களிக்கும் (anti-incumbency) மக்களின் மனோபாவத்தை மீறி மோடி வென்றிருப்பதால், இந்த வெற்றிக்கு இந்துத்துவத்தைத் தவிர வேறு என்ன காரணம்? என்பதே மற்ற ஓட்டுக்கட்சிகளின் அக்கறைக்கு உரிய விசயமாக இருக்கிறது.

சங்க பரிவார அமைப்புகளும், லூவா படேல் சாதியைச் சேர்ந்த கேசுபாய் படேல், கோர்தன் ஜடாபயா போன்ற பா.ஜ.க தலைவர்களும், தொகாடியா போன்ற வி.எச்.பி தலைவர்களும், மோடியை எதிர்த்த போதிலும், போட்டி வேட்பாளர்களை நிறுத்தியும், காங்கிரசை மறைமுகமாக ஆதரித்த போதிலும், மோடி வென்றது எப்படி? மாயாவதியின் கட்சி வாக்குகளைப் பிரிக்காமல் இருந்திருந்தால், காங்கிரசு கூடுதல் தொகுதிகளில் வென்றிருக்கக் கூடுமா? மோடிக்கு மாற்றாக முதல்வர் பதவிக்கு காங்கிரசு சார்பில் யாரையும் முன் நிறுத்தவில்லை என்பதுதான், தோல்விக்கு அடிப்படையா? ஆதிக்க சாதியான படேல் சாதியினர் பா.ஜ.க வை எதிர்த்ததால், மற்றெல்லா சாதியினரும் பா.ஜ.க.-வின் பக்கம் சாய்ந்து விட்டனரா? அல்லது உள் கட்சிப் பூசலால் பிளவு பட்டிருந்த இந்து ஓட்டு வங்கியை, தெகல்கா விவகாரம் தோற்றுவித்த இந்து உணர்வு, ஒன்றுபடுத்திவிட்டதா?... என தும்பிக்கை, காது, வால் என்று பிரித்து 'யானை'யைத் தடவுகின்றன, தேர்தல் முடிவு குறித்த ஊடகங்களின் ஆய்வுகள்.

குஜராத் இனப்படுகொலை குறித்த பெரும்பான்மை இந்துக்களின் மனப்போக்கு என்ன? மோடியின் மறுகாலனியாக்க வளர்ச்சித் திட்டங்கள் குறித்த குஜராத் மக்களின் கண்ணோட்டம் என்ன? அவை இந்தத் தேர்தல் முடிவுகளின் மீது செலுத்திய தாக்கம் என்ன? – என்ற கேள்விகளையே இந்த ஆய்வுகள் எதுவும் எழுப்பவில்லை. மாறாக, கேந்திரமான இவ்விரு பிரச்சினைகளையும், நமது பார்வையிலிருந்தே தந்திரமாக அகற்றி விடுகின்றன.

இந்தத் தேர்தல் முடிவல்ல, நமது பிரச்சினை. ஒருவேளை இத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றிருந்தால், அந்த வெற்றி, காந்திய மத நல்லிணக்கவாதிகளின் மனப்புண்ணுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்திருக்குமேயன்றி, நிச்சயமாக அது இந்துத்துவத்தின் தோல்வியாக இருந்திருக்காது.



'குஜராத் – இந்துத்துவத்தின் சோதனைச்சாலை' என்ற நிலைமையை மாற்றுவதற்கான ஒரு துவக்கப் புள்ளியாகக் கூட இருந்திருக்காது.

•••

குஜராத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு, மோடி விடுத்த ஒரு சவால் மிகவும் முக்கியமானது. ''என்னுடைய தேர்தல் பிரச்சாரத்தின் எல்லாக் குறுந்தகடுகளையும், ஒரு நடுநிலையாளர் குழுவிடம் சமர்ப்பிக்க நான் தயாராக இருக்கிறேன். அதில் மத வெறியைத் தூண்டக்கூடிய ஏதாவது ஒரு பேச்சைக் காட்டுங்கள். நான் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்'' (டைம்ஸ் ஆஃப் இந்தியா, டிசம். 25)

பாசிஸ்டுகளின் வழக்கமான 'வாய்ச்சவடால்' என்று இதனை ஒதுக்கிவிட முடியாது. இந்து, இந்துத்துவம், முஸ்லிம் என்ற சொற்களைத் தனது பிரச்சாரத்தில், மோடி அநேகமாக உச்சரிக்கவே இல்லை. அவற்றை உச்சரிக்காமலேயே, அவை தோற்றுவிக்கும் விளைவுகளை மோடியால் அறுவடை செய்ய முடிந்திருக்கிறது. காங்கிரசும், இந்தச் சொற்களைப் பயன்படுத்தவில்லை என்பதுதான், குரூரமான நகைச்சுவை. (இந்து பயங்கரவாதிகள் என்று ஒரே ஒருமுறை 'திக்விஜய் சிங்' பேசியதைத் தவிர).

'இந்துத்துவத்தின் சோதனைச்சாலை' என்று அறியப்படும் ஒரு மாநிலத்தில், கிராமம் முதல் நகரம் வரை, இந்து பாசிச அமைப்புகள் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு மாநிலத்தில், இந்துத்துவத்துக்கு எதிராகப் பேசும் அமைப்புகள், திரைப்படங்கள், பத்திரிகைகள், கலைஞர்கள் யாராக இருந்தாலும், தாக்கித் துரத்தப்படுவார்கள் என்பது




நிலைநாட்டப்பட்டிருக்கும் மாநிலத்தில், 2500 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டு, பல்லாயிரம் பேர் வீடு வாசலை இழந்து, கடந்த 5 ஆண்டுகளாக அகதி முகாம்களில் வாழ வேண்டியிருக்கும் ஒரு மாநிலத்தில், 'இந்து பாசிசம்' என்ற சொல்லையே பயன்படுத்தாமல், அதன் கொடூரத் தன்மையை அம்பலப்படுத்தாமல், மோடிக்குப் பெரும்பான்மையாக வாக்களித்திருக்கும் மக்களைத் தன் பக்கம் ஈர்ப்பதில்; காங்கிரஸ் எவ்வாறு வெற்றி பெற்றிருக்க முடியும்?

இந்துத்துவத்தை எதிர்ப்பது இருக்கட்டும், காந்திய மத நல்லிணக்கத்தைப் பேசினால்கூட குஜராத் இந்துக்களின் வாக்குகளை இழந்து விடுவோமென்று, காங்கிரசு அஞ்சியது. மோடி முகாமிலிருந்து வெளியேறிய அதிருப்


படிப்பகம்

www.padippakam.com



தியாளர்களும், 2002 இனப்படுகொலையின் குற்றவாளிகளுமான கோர்தன் ஜடாபயா, கேசுபாய் படேல், பிரவின் தொகாடியா போன்றோரை அரவணைத்துக் கொள்வதன் மூலம், படேல் சாதி வாக்குகளையும், மோடி எதிர்ப்பு இந்து வாக்குகளையும் அள்ளி விடலாம் என்று கணக்கிட்டது. இது முஸ்லிம் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தும் என்று தெரிந்திருந்த போதிலும், காங்கிரசை விட்டால் இப்போதைக்கு வேறு நாதி இல்லை என்ற முஸ்லிம் மக்களின் பரிதாபமான நிலைமையை, காங்கிரசு மிகவும் வக்கிரமாகப் பயன்படுத்திக் கொண்டது.

இது குஜராத் சூழ்நிலையைக் கணக்கில் கொண்டு காங்கிரசு வகுத்த தேர்தல் தந்திரம் மட்டுமல்ல. காங்கிரசே ஒரு மிதவாத இந்துத்துவக் கட்சிதான். அயோத்தி பிரச்சினைக்கு அடிக்கொள்ளியாக இருந்த ராஜீவ் காந்தி முதல், இன்று சேதுக் கால்வாய் விவகாரத்தில் பாரதிய ஜனதாவிடம் சரணடைந்த சோனியா காந்தி வரை இதற்குச் சான்றுகள் பல உண்டு. 2002 இனப்படுகொலையின் குற்றவாளிகளைச் சட்டபூர்வமாகத் தண்டிப்பதற்கு, ஒரு துரும்பைக் கூட காங்கிரசு எடுத்துப் போட்டதில்லை என்பது மட்டுமல்ல, கடந்த 5 ஆண்டுகளில் இந்த வழக்குகளை முடக்குவதிலும், மைய அரசு மோடிக்கு துணை நின்றிருக்கிறது என்பதே உண்மை.

எனவே பெயரைக் கூடக் குறிப்பிடாமல், 'மரண வியாபாரி' என்று தனது தேர்தல் பிரச்சாரத்தில் சோனியா குறிப்பிட்டாரே, அது மட்டும்தான் மோடியின் மீது காங்கிரசு தொடுத்த 'அதிபயங்கரத் தாக்குதல்'! இதற்கு மோடி கொடுத்த பதிலடிதான், மோடிக்கும் முகமூடிகளுக்குமிடையிலான உறவை நமக்கு விளக்குகிறது.

''5 கோடி குஜராத் மக்களை 'மரண வியாபாரிகள்' என்கிறார் சோனியா. அது உண்மையா?'' – ''இல்லை.. இல்லை..''

''சோரபுதீன் ஷேக்கை என்ன செய்ய வேண்டும்?'' – ''கொல்ல வேண்டும்.. கொல்ல வேண்டும்''

''குஜராத்தில் நடக்கக் கூடாத சம்பவங்களெல்லாம் நடந்ததாகச் சொல்கிறார்களே, அது உண்மையா?'' – ''இல்லை.. இல்லை''

மேற்கூறியவையெல்லாம், தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் மோடி எழுப்பிய கேள்விகள். அவற்றுக்கு, கூட்டம் ஆரவாரமாக அளித்த பதில்கள். இது போன்றவையெல்லாம் எல்லாக் கூட்டங்களிலும் கட்சித் தொண்டர்கள் போடும் கூச்சல்தானே! என்று கருதிக் குறைத்து மதிப்பிட முடியாது. கூட்டம் அளித்த பதில் என்பது, குஜராத் இந்து உயர்சாதியினரிடம் உறுதியாக நிலவும் பொதுக்கருத்து. குஜராத் இந்து சமூகத்தின் பொது மனோபாவம்.

தன்மீது தொடுக்கப்பட்ட தாக்குதலை, 5 கோடி குஜராத் மக்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாக திசை திருப்புவதில், மோடி எப்படி வெற்றி பெற முடிந்தது? பார்ப்பன எதிர்ப்பு, சுயமரியாதை, சாதிமறுப்பு ஆகிய வற்றை உள்ளடக்கமாகக் கொண்டு 'தமிழன்' என்ற சொல்லைப் பெரியார் பயன்படுத்தினாரென்றால், அதன் நேர் எதிரான பொருளில் 'குஜராத்தி' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறான் மோடி.

2002 தேர்தலின் போதே 'இந்து' என்ற சொல்லை, 'குஜராத்தி' என்ற சொல்லைக் கொண்டு தந்திரமாக மாற்றீடு செய்துவிட்டான் மோடி. 2002 இனப்படுகொலையைத் தொடர்ந்து, உலகமே இந்து பாசிஸ்டுகளைக் காறி உமிழ்ந்தபோது, தனது தேர்தல் பிரச்சாரத்துக்கு மோடி வைத்த பெயர் 'குஜராத் கவுரவ யாத்திரை'. ''கர்வ் சே கஹோ ஹம் ஹிந்து ஹை'' என்ற ஆர்.எஸ்.எஸ்.-ஸின் முழக்கம், 'குஜராத்தி கர்வமாக மாற்றப்பட்டு விட்டது. முஸ்லிம்கள் அந்நியர்கள்' என்ற உட்கிடையான பொருளைக் கொண்ட இந்த குஜராத்தி இனவாதம், இந்து பாசிச மனோபாவத்தைத் தன் இதயமாகக் கொண்டிருக்கிறது.

''சோரபுதீன் ஷேக் என்ற கிரிமினலை என்ன செய்யவேண்டும்?'' என்று கூட்டத்தைப் பார்த்து மோடி எழுப்பிய கேள்வி

''முஸ்லிம் = கிரிமினல், முஸ்லிம் = பயங்கரவாதி'' என்ற கருத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டது.

''கொல்ல வேண்டும்'' என்ற கூட்டத்தின் கூச்சல், 2002 இனப்படுகொலைக்கு 'சங்கேத மொழி'யில் கூட்டம் வழங்கிய அங்கீகாரம்.

அரசாங்கம், போலீசு, நீதிபதிகள் மட்டுமல்ல, ''மொத்த இந்து சமுதாயமே எங்கள் பின்னால் இருந்தது,'' என்று தெகல்கா நிருபரிடம், இந்து




படிப்பகம்

www.padippakam.com

பாசிஸ்டு கிரிமினல்கள் அளித்த வாக்கு மூலத்தின் பொருள், இதுதான்.

2002 இனப்படுகொலைக்காக குஜராத்தின் இந்துப் பொதுக்கருத்து, கடுகளவும் வருந்தவில்லை, என்றே குஜராத்தின் எல்லா சமூகவியலாளர்களும், குறிப்பிடுகிறார்கள். 'கோத்ரா சம்பவம்' முஸ்லிம்கள் நடத்திய திட்டமிட்ட தாக்குதல், என்று நம்பியதால் உருவான பொதுக்கருத்து அல்ல. "நாங்கள் ஒன்றும், நடந்ததை நியாயப்படுத்தவில்லை. இருந்தாலும் ஏன் அதையே திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? முஸ்லிம்கள் மட்டும்தான் இந்த சமூகத்தில் பாதிக்கப் பட்டிருக்கிறார்களா? டெல்லி சீக்கியர் படுகொலையின் குற்றவாளிகளைத் தண்டித்து விட்டார்களா?'' என்று அடுக்கடுக்காக எதிர்க் கேள்வி கேட்டு, இறுதியில் படுகொலையை நியாயப்படுத்துவதில் வந்து முடிக்கிறார்கள், இந்து நடுத்தர வர்க்கத்தினர். இவர்களில் 'மிகவும் நல்லவர்கள்' என்று கூறப்படுபவர்கள் கூட "2002-ஐ மறந்து விடுங்கள்'' என்று அறிவுரை கூறுகிறார்கள். 'மறப்பதா? வேண்டாமா? என்பதை பாதிக்கப்பட்ட மக்கள்தான் முடிவு செய்ய முடியும்' என்ற எளிய நியாயம் கூட உரைக்காத அளவிற்கு, இந்துப் பெரும்பான்மையினர் மத்தியில் அங்கே 'சகஜநிலை' திரும்பியிருக்கிறது.

மறக்க மறுத்தால்? மீண்டும் சகஜ நிலை குலையும். தெகல்கா-வின் அம்பலப்படுத்தல்கள் வெளியானவுடனே, மீண்டும் ஒரு தாக்குதல் தொடங்கி விடுமோ? என்று அகதி முகாம்களில் இருந்த முஸ்லிம்கள் அடைந்த அச்சம் இதற்குச் சான்று கூறுகிறது.

இத்தகைய சகஜ நிலையையும் அமைதியையும் நிலைநாட்டியிருப்பதே, இப்போது மோடியின் சாதனையாகி விட்டது.

"பாதுகாப்பு இல்லாமல், வளர்ச்சி எப்படி இருக்க முடியும்?'' என்று கேட்கிறார் மோடி. யாரிடமிருந்து பாதுகாப்பு? என்ற கேள்வியை குஜராத் எழுப்பவில்லை. 2500 பேரைக் கொன்று போட்ட பிறகும், சிறு சலசலப்போ மும்பையில் நடந்ததைப் போன்ற பயங்கரவாத எதிர்த்தாக்குதலோ இல்லாமல், குஜராத் இந்து சமூகத்தை, குறிப்பாக அதன் முதலாளிகளையும், வணிகர்களையும் பாதுகாத்திருக்கிறார் அல்லவா, அந்தப் பாதுகாப்பைத்தான் கூறுகிறார் மோடி!

மறுகாலனியாக்க வளர்ச்சித் திட்டங்களால், நாடே நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருப்பதாகவும், பயங்கரவாதமும் தீவிரவாதமும்தான் இந்த வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாகவும், மன்மோகன் சிங் வழங்குகின்ற சித்திரம், பன்னாட்டு முதலாளிகள் நலனையும், இந்தியத் தரகுமுதலாளிகளின் நலனையுமே பிரதிபலிக்கிறது. மோடியும் அதையேதான் கூறுகிறாரெனினும், குஜராத்தின் குறிப்பான பின்புலத்தில், 'ஆளும் வர்க்கத்துக்கு வழங்கப்படும் பாதுகாப்பிலிருந்து, இந்துக்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு பிரிக்க வொண்ணாததாகி விடுகிறது.' அதாவது, 'எது ஆளும் வர்க்கத்தின் நலனோ? அதுதான் இந்துக்களின் நலன் என்ற கருத்து அதன் வர்க்க ரீதியான அர்த்தத்திலும், குஜராத் மக்களின் மனதில் பதியவைக்கப் பட்டிருக்கிறது.

> **"பாதுகாப்பு இல்லாமல், வளர்ச்சி எப்படி இருக்க முடியும்?'' என்று கேட்கிறார் மோடி. யாரிடமிருந்து பாதுகாப்பு? 2500 பேரைக் கொன்று போட்ட பிறகும், சிறு சலசலப்போ பயங்கரவாத எதிர்த்தாக்குதலோ இல்லாமல், குஜராத் இந்து சமூகத்தை, குறிப்பாக அதன் முதலாளிகளையும், வணிகர்களையும் பாதுகாத்திருக்கிறார் அல்லவா, அந்தப் பாதுகாப்பைத்தான் கூறுகிறார் மோடி!**

"விமான நிலையத்துக்கே கார்களை அனுப்பி வைத்து, தொழிலதிபர்களை மகாராஜாக்களைப் போல வரவேற்கும் ஒரே முதல்வர், மோடி மட்டும்தான்'' என்று கூறி, மோடியின் வெற்றியைக் கொண்டாடினார் ஒரு இந்தியப் பெருமுதலாளி. "குஜராத் சாதித்திருப்பதையும், சாதிக்கவிருப்பதையும் எஞ்சியுள்ள இந்தியா ஒருக் காலத்திலும் இனி சாதிக்க முடியாது'' என்று கூறி மோடியின் வெற்றியைக் கொண்டாடுகிறார்கள், வெளிநாட்டில் குடியேறிய குஜராத்திகள்.


இவர்களின் இந்தக் கொண்டாட்டத்துக்கு அர்த்தமில்லாமல் இல்லை. போராட்டங்களோ எதிர்ப்புகளோ இல்லாமல், சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவியிருக்கும் மாநிலம் குஜராத். சி.பொ.ம. சட்டத்தை 2006-இல் மைய அரசு கொண்டுவருவதற்கு முன்னர், 2004-லேயே குஜராத்தில் அச்சட்டத்தைக் கொண்டு, வந்தவர் மோடி. 'அடானி குழுமம்' என்ற தரகு முதலாளிக்கு, சதுர கெஜம் 50 பைசா விலையில் (சதுர அடி 5 காசு) 33,000 ஏக்கர் நிலத்தை சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்காக விற்றிருக்கிறார் மோடி. அதை சதுர கெஜம் 1200 ரூபாய்க்கு விற்று, இந்த நில விற்பனை மூலம் மட்டுமே 20,000 கோடி ரூபாயை இலாபம் ஈட்டியிருக்கிறது அடானி குழுமம். சி.பொ.மண்டலத்தால், வாழ்க்கை இழந்த கூலி விவசாயிகளுக்கோ அங்கே எவ்வித நிவாரணமும் வழங்கப்படுவதில்லை. இந்திய மக்கள்தொகையில் 5% உள்ள குஜராத், இந்திய பங்குச்சந்தையின் 30 சதவீதத்தைக் கையில் வைத்திருக்கிறது. அதே குஜராத் கல்வியிலும், ஆரம்ப மருத்துவத்திலும் பின்தங்கியிருக்கிறது.

சராசரி தனிநபர் வருமானத்தில், குஜராத்திற்கு இந்தியாவிலேயே 4-வது இடம். மக்கள் நலத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டிலோ 15-வது மாநிலமாக இருக்கிறது குஜராத். 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 47% பேர் ஊட்டச்சத்துக் குறைவினால் எடை குறைந்து, சூம்பிக் கிடக்கின்றனர். தொழில் மயமாக்கப்பட்ட மாநிலங்களில், முதல் 3 இடங்களிலேயே குஜராத் தொடர்ந்து இருந்து வருகிறது. இந்தத் தொழில் மயமாக்கத்தினால் வெளியேற்றப்படும் பழங்குடிகளும் தலித் மக்களும், எவ்வித நிவாரணமும் இல்லாமல் கிராமப்புறங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'சூப்பர் ஹைவே'க்கள் எனப்படும் சாலைகள் குஜராத்தில் இருக்கின்றன; ஆனால், அந்தச் சாலைகளுக்குச் சுங்கவரி செலுத்தப் பணமில்லாமல், சாலையோரமாக ஒட்டகத்தில் பயணம் போகிறார்கள், மக்கள்.

மறுகாலனியாக்க வளர்ச்சித் திட்டங்களால் தீவிரமடைந்திருக்கும் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள், சுரண்டப்படும் மக்களிடம் கலக உணர்வைத் 'தானே' தோற்றுவித்து விடுவதில்லை. தேர்தல் ஆதாயத்துக்காகக் கூட, காங்கிரஸ் கட்சி இந்த வர்க்க


படிப்பகம்

www.padippakam.com




முரண்பாடுகளை அம்பலப்படுத்துவதில்லை. ஆளும் வர்க்கநலனைப் பேணுவதில் அந்த அளவுக்கு ஒன்றியிருக்கும் பாரதிய ஜனதா-காங்கிரஸ் ஆகிய கட்சிகள் மட்டுமே, அரசியல் அரங்கில் செல்வாக்கு செலுத்துவதால், மக்களின் அரசியல் கண்ணோட்டமும் ஆளும் வர்க்கம் விதிக்கும் வரம்புகளைத் தாண்டுவதில்லை. வர்க்க ஒடுக்குமுறைக்கும் இந்துத்துவ ஒடுக்குமுறைக்கும் இடையிலான உறவுக்கு குஜராத்தில் தெளிவாக அடையாளம் காணத்தக்க பல வேர்கள் உள்ளன.

தொழிற்சங்க இயக்கத்தை முளையிலேயே கருக்கி, முதலாளிகளைத் தம் அறங்காவலர்களாகப் பார்ப்பதற்கு உழைக்கும் மக்களைப் பழக்கிய காந்தியம், வர்க்க ஆதிக்கத்துடன் சாதி ஆதிக்கத்தையும் மறைமுகமாக உறுதிப்படுத்தியது. 1980-களில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக இந்தியாவிலேயே முதன்முதலாகப் போராட்டம் நடத்திய மாநிலம் குஜராத் என்பதும், அந்தப் போராட்டத்தின் முன்னணித் தலைவர்களில் மோடியும் ஒருவர் என்பதும் அந்த மாநிலத்தில் நிலவும் 'சாதி ஆதிக்க' மனோபாவத்தைப் புரிந்து கொள்ள உதவும் வரலாற்றுச் சான்றுகள். மலம் அள்ள மறுத்த குற்றத்துக்காக, 80-களில் தலித்மக்கள் மீது, கட்டுப்பாடாக சமூகப் புறக்கணிப்பு நடத்திய மாநிலமும் குஜராத் தான். 'மலம் அள்ளுவதைக் கூட, ஒரு தியானமாகச் செய்யமுடியும்' என்று மோடி பேச முடிவதற்கான காரணம் இங்கே இருக்கிறது.

அன்று இட ஒதுக்கீட்டு எதிர்ப்பின் தாக்குதல் இலக்காக தலித்துகள். இன்று குஜராத் கவுரவத்தின் தாக்குதல் இலக்காக முஸ்லிம்கள். இதில் தலித்துகளும் பழங்குடி மக்களும் இந்துத்துவத்தின் காலாட்படையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் புதிய முன்னேற்றம்.

மறுகாலனியாக்க வளர்ச்சியை 'உடலாக'வும், இந்துத்துவத்தை அதன் 'ஆன்மா'வாகவும் ஒருங்கிணைக்க முடிந்ததில்தான், மோடியின் வெற்றி அடங்கியிருக்கிறது. சந்தைக் கடுங் கோட்பாட்டு வாதமும், மதக் கடுங் கோட்பாட்டு வாதமும் இணையும் புள்ளி இது. தனியார்மய ஆதரவு, தொழில் வளர்ச்சி, பங்குச் சந்தை, சிறு வணிகம் என்று தமது வர்க்க நலனைப் பார்க்கவோ ஏங்கவோ பழகியிருக்கும் குஜராத் சமூகத்தைப் பொருத்தவரை, 'மதச்சார்பின்மை' என்பது அதிக பட்சம் ஒரு அறக் கோட்படாக மட்டுமே இருக்க இயலும்.

ஆனால், மதச்சார்பின்மை என்பது வெறும் அறம் சார்ந்த விழுமியம் அல்ல. அது ஒரு அரசியல் கோட்பாடு. ஜனநாயகத்துக்கான போராட்டங்களின் மூலம் மட்டும்தான், மதச்சார்பின்மையைத் தனது பண்பாடாக ஒரு சமூகம் கிரகித்துக் கொள்ள இயலும். ஆளும் வர்க்க அரசியலிலும், அரசியலற்ற வணிக மனோபாவத்திலும் ஊறப்போடப்பட்ட ஒரு சமூகம், பாசிசத்தைத் தலை வணங்கி ஏற்றுக் கொள்வது தவிர்க்க இயலாதது.

தாராளவாதக் கொள்கை அளிக்கும் நவீன தொழில் வளர்ச்சியும், கல்வியும், பண்பாடும், தாராளவாத (liberal) விழுமியங்களை உருவாக்கி விடுவதில்லை. மாறாக, பழைமைவாதத்தையும், சுயநலத்தையும், ஆணவத்தையும், பாசிசத்தையும் மட்டுமே அவை வளர்க்கின்றன என்பதற்கு குஜராத்தும், குஜராத்தின் பாசிசத்தை டாலர் ஊற்றி வளர்க்கும் வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்களும், சான்றாக இருக்கிறார்கள்.

மோடியின் முகமூடிப் பிரச்சாரத்தைப் பார்த்து விட்டு, இது, 'இந்துத்துவா' அல்ல 'மோடித்துவா' என்கிறார்கள், சில பத்திரிகையாளர்கள். பாசிசம் தனியொரு கொள்கையாக இருப்பதில்லை. இட்லர், முசோலினி, அத்வானி, மோடி போன்ற பாசிஸ்டுகளின் வழியாகத்தான் அது தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. மோடி முகமூடி வருவதற்கு முன்னால், மோடி ஆணுறை வந்துவிட்டது. அரசு விநியோகிக்கும் ஆணுறைகளில் கூடத் தன்னுடைய படத்தை அச்சிட்டிருக்கிறார் மோடி. கேட்பதற்கே அருவருப்பாகத்தான் இருக்கிறது, எனினும் ஆணுறைகளில் அச்சிடத்தக்க ஆண்மகனாக, குஜராத்தின் இந்துப் பெரும்பான்மை, மோடியைக் கருதியிருக்கிறது என்பது, அதைக் காட்டிலும் அருவருக்கத்தக்கதாக இருக்கிறது.

தெகல்கா நிருபரிடம், 'பாபு பஜரங்கி' என்ற இந்துத்துவக் கொலைகாரன் வியந்து கூறிய சொற்களை இங்கே நினைவு படுத்திக் கொள்ளுங்கள். ''மார்த் ஆத்மி ஹை!'' - ஆம்பிளைச் சிங்கம்யா! இந்தச் சொல்லின் வழியே தெறிக்கும் பன்முகம் கொண்ட பொருள், 'குஜராத்தின் இந்துப் பெரும்பான்மை மோடியைத் தெரிவு செய்தது ஏன்?' என்பதை விளக்குகிறது.

• • •

அந்த முகமூடி, மோடிக்கும், குஜராத்தின் இந்துப் பெரும்பான்மைக்கும் இடையே ஏற்படுத்தியிருந்த 'வலிமையான பிணைப்பின்' பொருளும் விளங்குகிறது.

• மருதையன்

**மோடி முகமூடி வருவதற்கு முன்னால், மோடி ஆணுறை வந்துவிட்டது. ஆணுறைகளில் அச்சிடத்தக்க ஆண்மகனாக, குஜராத்தின் இந்துப் பெரும்பான்மை, மோடியைக் கருதியிருக்கிறது என்பது, அதைக் காட்டிலும் அருவருக்கத்தக்கதாக இருக்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

# சுமங்கலித் திட்டம்: பிள்ளைக்கறி தின்னும் ஜவுளி முதலாளிகள்!

"வேலை காலி இல்லை என்ற பலகை தொங்கியது அந்தக் காலம். இன்று எங்கு திரும்பினாலும் வேலை இருக்கிறது. இது 'தனியார்மயம் தாராளமயம் உலகமயம்' என்ற கொள்கைக்குக் கிடைத்த வெற்றி" என்கிறார்கள் ஆட்சியாளர்கள். இந்தியத் தரகு முதலாளிகளோ, 'மனித வளம் - அதுதான் நம்முடைய பலம்' என்று மக்களை நாக்கில் நீர் சொட்டப் பார்க்கிறார்கள். "மக்கள்தொகைப் பெருக்கம்தான் நாடு முன்னேறாததற்குக் காரணம்" என்று அரசாங்கமும் முன்புபோல மக்களை இப்போது கரித்துக் கொட்டுவதில்லை. மொத்தத்தில், மக்களுக்கு இப்போது மதிப்பு கூடிவிட்டது.

15-30 வயதுக்கு இடைப்பட்ட இளைய தலைமுறை உலகிலேயே இந்தியாவில்தான் அதிகமாக இருக்கிறதாம். நாட்டை முன்னேற்றும் பொருட்டு கனிமவளம், நீர்வளம், எண்ணெய் வளம், காட்டுவளம் ஆகியவற்றைத் தனியார்மயமாக்கி, பன்னாட்டு நிறுவனங்களும் தரகுமுதலாளிகளும் அவற்றைத் தம் விருப்பம் போலச் சூறையாடுவதற்கேற்பச் சட்டங்களைத் திருத்தி விட்டன பா.ஜ.க, காங். அரசுகள். ஆனால், இந்த மனித வளத்தைச் சூறையாடுவதற்குத்தான் பல சட்டங்கள் தடையாக இருக்கின்றனவாம். அவற்றையும் திருத்தி விட்டால் முதலாளிகள் மகிழ்ச்சியுடன் தொழில் தொடங்குவார்கள், என்கிறார் மன்மோகன்சிங்.


பணிப்பாதுகாப்பு, குறைந்த பட்ச ஊதியம், 8 மணி நேர வேலை, தொழிற்சங்க உரிமைகள் போன்ற தடைகளை அகற்றினால்தான், முதலாளிகள் தொழிலாளிகளை சுதந்திரமாகக் கசக்கிப் பிழிய முடியும், என்பதுதான் பிரதமர் கூறுவதன் உட்பொருள். இருந்தாலும் "உங்களைக் கசக்கிப் பிழிவதற்கான வாய்ப்பை வழங்குகிறோம்" என்று முதலாளிகளோ பிரதமரோ, தொழிலாளிகளிடம் கூற முடியாதல்லவா? அதனால்தான், தங்களுடைய இலாபத்துக்கான வாய்ப்பை, 'தொழிலாளிகளுக்கான வேலை வாய்ப்பு' என்று சித்தரிக்கிறார்கள் முதலாளிகள்.

தமிழகத்தின் வேலைவாய்ப்பு மையம் திருப்பூர். நாட்டுக்குச் சோறு போட்டு நொடித்துப் போன 17 மாவட்டங்களின் விவசாயிகள், உலகத்துக்கு உடை கொடுக்கும் இந்த ஜவுளித் தொழிலுக்கு வந்துதான் சரணடைகிறார்கள். 1996-97-இல் ரூ.2255 கோடியாக இருந்த திருப்பூரின் ஏற்றுமதி, 2006-07-இல் 11,000 கோடியாக உயர்ந்திருக்கிறதாம். 'நீருயர நெல்லுயரும்' என்பது போல, உற்பத்தி உயர உயர உழைப்பாளிகளின் வாழ்க்கையும் உயரும் என்கிறது அரசாங்கம். இந்த 5 மடங்கு வளர்ச்சி, தொழிலாளர்களின் வாழ்க்கையில் எத்தனை மடங்கு வளர்ச்சியைக் கொண்டுவந்திருக்கிறது?

அண்ணா தொழிற்சங்கப் பேரவை சார்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு, இந்த வளர்ச்சியின் பின்னால் உள்ள தொழிலாளி வர்க்கத்தின் வீழ்ச்சியை அம்பலமாக்குகிறது. அந்நியச் செலாவணியை அள்ளித்தரும் கற்பக விருட்சமாகச் சித்தரிக்கப்படும் ஜவுளித் தொழிலில், நிலவும் கொத்தடிமைத்தனத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

"இந்தத் துறையில் பணியாற்றும் தொழிலாளிகளில், 70% பேர் 'தொழிற் பழகுனர்கள்' (apprentice) என்ற பெயரில் சுரண்டப்படுகிறார்கள். நிரந்தரத் தொழிலாளிகளை வெளியேற்றி, மேலும் மேலும் இத்தகைய தொழிற் பழகுனர்களால் எல்லா ஆலைகளும் நிரப்பப்படுகின்றன. கோவை, ஈரோடு, திண்டுக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள 406 பஞ்சாலைகளில் மட்டும் 38,461 பெண்கள் 'சுமங்கலித் திட்டம்' என்ற பெயரில் கொத்தடிமைகளாக, கொடூரமான முறைகளில் சுரண்டப்படுகிறார்கள்" என்று அம்பலப்படுத்துகிறது இந்த மனு. தமிழகத்தில் உள்ள ஜவுளி மில்களின் எண்ணிக்கை 1600. இத்தகைய பெண் கொத்தடிமைகளின் எண்ணிக்கை மொத்தம் எவ்வளவு என்பதற்குக் கணக்கில்லை. பஞ்சாலைகளில் முறுக்கிப் பிழியப்படும் பல்லாயிரக்கணக்கான இளம் பெண்களின் கண்ணீர்க் கதை இது. இந்தக் கண்ணீர்க் கதைக்கு, முதலாளிகள் சூட்டியிருக்கும் பெயர் சுமங்கலித் திட்டம்.

ஏழை, கூலி விவசாயிகள், கிராமப்புற ஏழைகள் ஆகியோரது வீட்டுப் பெண் பிள்ளைகளைக் குறிவைத்து, ஜவுளி ஆலை முதலாளிகளால் உருவாக்கப்பட்டிருக்கும் திட்டம்தான், சுமங்கலித் திட்டம். இதற்காகவே கிராமப்புறங்களில் அலையும் தரகர்கள், பள்ளியிறுதித் தேர்வு முடிந்து, விடுமு





படிப்பகம்

www.padippakam.com

றையில் இருக்கும் பெண்களுடைய பெற்றோர்களைக் குறிவைக்கிறார்கள். ''தினக்கூலி 25 ரூபாய்; உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம்; இலவசமாக தையல் பயிற்சி, கம்ப்யூட்டர் பயிற்சி; 3 ஆண்டுகள் வேலை செய்தால், முடிவில் 50,000 ரூபாயுடன் வீடு திரும்பலாம்'' என்று பெற்றோர்களுக்கு ஆசை காட்டுகிறார்கள். ''வீட்டில் இருந்தால் வீண் செலவுதானே, படித்து ஆகப்போறதென்ன, சும்மாயிருப்பதற்கு தொழில் படிச்ச மாதிரியும் ஆச்சு, கல்யாணத்துக்கு சம்பாரிச்ச மாதிரியும் ஆச்சு'' என்று கூறி, பெண்பிள்ளையைக் கட்டிக் கொடுக்க வழியில்லாத அவர்களது நிலைமையை நினைவுபடுத்துகின்றனர். ''ஒழுக்கம், கற்பு விசயத்தில், உங்களைவிட முதலாளி ரொம்பவும் கண்டிப்பாக்கும்'' என்று கதை சொல்லி, பெற்றோரின் தயக்கத்தைப் போக்குகின்றனர்.

தயங்கி என்ன செய்ய முடியும்? பெண்ணைப் படிக்க வைக்க ஆசையிருந்தாலும், விவசாயிக்கு வசதி கிடையாது. அவருக்கே வேலை கிடைக்காத கிராமப்புறத்தில், பிள்ளைக்கு வேலையும் கிடைக்காது. கல்யாணம் கட்டிக் கொடுக்கவோ, காசும் கிடையாது. தரகனின் பேச்சைக் காட்டிலும், வாழ்க்கை தரும் இந்த நிர்ப்பந்தம் அவர்களைத் தலையாட்ட வைக்கிறது.

இப்படி கிராமப்புறங்களிலிருந்து ஓட்டிச் செல்லப்படும் பெண்கள், மில்லுக்கு அருகிலேயே தங்க வைக்கப் படுகிறார்கள். கால் நீட்டிக்கூடப் படுக்க முடியாமல், ஒரு அறைக்கு 70 பேர் மந்தைகளைப் போல அடைக்கப்படுகிறார்கள். தினசரி 12 மணி நேரம் வேலை. கூடுதலாக 3 மணி நேரமாவது வேலை செய்ய வேண்டியிருக்கும். மறுத்தால் நாள் முழுதும் வெயிலில் நிற்கும் தண்டனை. ஒருநாள் கூலி 15 முதல் 25 ரூபாய் வரை. பேசிய கூலியைக் கொடு என்று வாய்திறந்து கேட்கமுடியாது. ஆண்டுக்கு 5 நாள்தான் விடுமுறை. உடம்பு முடியாமல் லீவு போட்டால் சம்பள வெட்டு. மாதவிடாய்க் காலத்திலும் கடினமான வேலைகளிலிருந்து விலக்கு கிடையாது. வேலை நேரத்தில் கழிவறைக்கு ஒதுங்க நினைத்தால், ஆண் கங்காணிகளின் சீண்டல் பேச்சுக்களையும் கழுகுப்பார்வைகளையும் தாண்டித்தான் போக முடியும். வீட்டிலிருந்து வரும் கடிதங்கள் பிரித்துப் படிக்கப்படும். தங்கியிருக்கும் விடுதியிலிருந்து வெளியில் செல்லவோ, வெளியாள்களிடம் பேசவோ அனுமதி கிடையாது. ஒருவேளை, மூன்றாண்டுகளுக்கு சில மாதங்கள் முன்னதாகத் திருமணம் நிச்சயமாகி விட்டால்கூட, மொத்தத் தொகையும் மறுக்கப்படும். காதலித்தாலும் வேலைநீக்கம்.

தினக்கூலியில் சாதிபேதமும் உண்டு. நாகமலை என்ற கிராமத்திலிருந்து வந்த தலித் பெண்களுக்கு 15 ரூபாய்தான் தினக்கூலி. திண்டுக்கல் மாவட்டம், தோட்டணாம்பட்டி மரகதத்துக்கு இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு திருமணமான குற்றத்துக்காக, மொத்தத் தொகையும் மறுப்பு. பழனி விஜயகுமார் மில்லின் முதலாளியோ, திடீரென்று மில்லை மூடி, சுமங்கலித் திட்டத்தில் வேலை செய்த 789 பெண்களுக்குச் சேர வேண்டிய மொத்தத் தொகையையும் விழுங்கி விட்டான். நிச்சயிக்கப்பட்ட திருமணம் நின்றுபோய், நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கிய பின்னரும் பணம் வராததால், தற்கொலைக்கு முயன்ற பெண்களும் உண்டு.

**கோவை, ஈரோடு, திண்டுக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள 406 பஞ்சாலைகளில் மட்டும் 38,461 பெண்கள் 'சுமங்கலித் திட்டம்' என்ற பெயரில் கொத்தடிமைகளாக, சுரண்டப்படுகிறார்கள்.'' தமிழகத்தில் உள்ள ஜவுளி மில்களின் எண்ணிக்கை 1600. இத்தகைய பெண் கொத்தடிமைகளின் எண்ணிக்கை மொத்தம் எவ்வளவு என்பதற்குக் கணக்கில்லை.**

முழுசாக 50,000 ரூபாயைப் பார்த்தறியாத விவசாயிகள், அந்தத் தூண்டிலில் சிக்கித்தான் பெண்களை அனுப்புகிறார்கள். ஆனால், 'குற்றம் குறை இல்லாமல் மூன்றாண்டுகளை முடித்தால்தான் முழுத்தொகை' என்ற அந்த நிபந்தனைதான், ஆகக் கொடூரமான கொத்தடிமைத்தனத்தையும் சகித்துக் கொள்ளும் கட்டாயத்தை அந்தப் பெண்களுக்கு ஏற்படுத்துகிறது. ''அடிக்கடி பார்க்க வந்தால் அதுவே பிரச்சினையாகி விடும்'' என்று பெற்றோர்களையே துரத்தும் பெண்களின் பயம், காதலிக்க பயம், உடல்நலம் குறைந்தால் தகுதிக் குறைவாகி விடுமோ, என்று அதை வெளியில் சொல்ல பயம், ஒதுங்க நினைத்தால் கூட சூப்பர்வைசரைக் கண்டு பயம், ஓட நினைத்தால் கஞ்சிக்கு வழியில்லாத வீட்டை எண்ணிப் பயம், மிசினில் சிக்கி விரல் துண்டானாலும் மருத்துவ விடுப்பு எடுக்க பயம், பாலியல் வன்முறைக்கு ஆளானாலும் அதைச் சகித்துக் கொள்ளவேண்டிய பயம் - இப்படித் திட்டமிட்டே அச்சத்தில் உறைய வைத்துதான் அந்தப் பெண்களை உறிஞ்சுகிறார்கள், முதலாளிகள்.

தாங்கள் அனுபவித்து வரும் கொடுமையைத் தம் பெற்றோரிடம் சொன்னால் கூடப் பிரச்சினையாகி விடுமோ, என்று அஞ்சும் இந்தப் பெண்கள், இவற்றையெல்லாம் தாமாகவே வெளியுலகிற்குக் கொண்டு வந்து விடவில்லை. பத்திரிகையாளர்களிடம் கூட பேசப் பயந்தார்கள். நிரந்தரத் தொழிலாளிகளின் மூலம்தான், இப்பிரச்சினையின் வீச்சும், பரிமாணமும் வெளியில் வந்திருக்கின்றன. நிரந்தரத் தொழிலாளர்களையெல்லாம் கட்டாயப்படுத்தி, 'விருப்ப ஓய்வி'ல் அனுப்பிவிட்டு, மொத்த உற்பத்தியையும் தொழிற்பழகுனர்களை வைத்தே நடத்த, முதலாளிகள் சதி செய்வதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள் நிரந்தரத் தொழிலாளர்கள். ''100% தொழிற்பழகுனர்களை வைத்தே ஆலையை நடத்தும்போதுதான் ஜவுளித் தொழிலின் திறனைக் கூட்ட முடியும்'' என்று வெளிப்படையாக பத்திரிகைக்கு பேட்டி கொடுக்கிறார் தென்னிந்திய ஜவுளி ஆலை அதிபர்கள் சங்கத்தின் செயலர் செல்வராஜ்.

இவ்வாறு கூறுவதே சட்டவிரோதமல்லவா, என்று பலர் கருதலாம். ஆனால் 1947-இல் இயற்றப்பட்ட தொழிற்பழகுனர் சட்டம், மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் பேரை தொழிற்பழகுனர்களாக வைத்துக் கொள்ளலாம் என்ற வரம்பு எதையும் குறிப்பிடவில்லை. முதலாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, தொலைநோக்குடன் வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்தச் சட்டத்தின் கீழ்தான் சுமங்கலித்


படிப்பகம்

www.padippakam.com



திட்டம் இன்று அமலாகிக் கொண்டிருக்கிறது. அண்ணா தொழிற்சங்கம் போட்ட வழக்கை ஒட்டி, 17 மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சியர்கள் தலைமையில் தொழிலாளர் துறை இணை ஆணையர்கள், வருவாய்த்துறை ஆய்வாளர்கள் அடங்கிய குழு சுமங்கலித் திட்டத்தை ஆய்வு செய்வதற்காக அமைக்கப் பட்டது. மில்கள் அதிகம் உள்ள கோவை, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர்கள் இத்திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுவதாக அறிக்கை கொடுத்து விட்டனர்.

''அந்தப் பெண்கள் செய்யும் வேலைக்கு, அதிகபட்சம் 6 மாதத்துக்கு மேல் பயிற்சி தேவையில்லை. 3 ஆண்டுகள் தொழிற்பழகுனர்களாக அவர்களை வைத்திருப்பது மோசடி. நிரந்தரத் தொழிலாளிகளின் வேலைகள் அனைத்தையும் அவர்கள் செய்கிறார்கள். ஆனால், உரிமை மாத்திரம் அவர்களுக்கு மறுக்கப்படுகிறது'' என்று தொழிற்சங்கம் கூறும் குற்றச்சாட்டை தொழிலாளர் துறை ஆணையர்கள், காதில் கூடப் போட்டுக் கொள்ளவில்லை. அதிகார வர்க்கத்தை முதலாளிகள் விலை பேசிவிட்டார்கள் என்பது மட்டுமல்ல பிரச்சினை. 'தொழில் வளர்ச்சிக்கு உகந்த தொழிலாளர் கொள்கை இதுதான்' என்பதே இன்று அரசாங்கத்தின் நிலைப்பாடு. அதனால்தான் தொழிலாளர் சட்டங்களில் ஏற்கெனவே இருக்கும் ஓட்டைகளை இன்னும் பெரிதாக்க வேண்டும் என்கிறார் மன்மோகன் சிங்.

மூன்றாண்டு காலம் ஒரே வேலையைச் செய்து, அவ்வேலையில் தேர்ச்சி பெற்ற பெண்களை பணி நிரந்தரம் செய்ய முதலாளிகள் தயாரில்லை, என்பது மட்டுமல்ல, நாளொன்றுக்கு 100 ரூபாய் கூலி கொடுத்துத் தற்காலிகப் பணியாளராக வைத்துக் கொள்ளவும் அவர்கள் தயாரில்லை. பட்டமரத்தைப் பார்த்தொதுக்கும் பறவையைப் போல, தண்ணீர் மட்டம் குறைந்தவுடன் தடமொன்றை மாற்றிவிடும் தண்ணீர் வியாபாரி போல, பதின் வயதில், இயற்கை மனித உடலுக்கு வழங்கும் ஆற்றலை, மூன்றே ஆண்டுகளில் கசக்கி உறிஞ்சி விட்டுத் துப்பி விடுகிறார்கள், முதலாளிகள். கிராமப்புறமெங்கும் கொட்டிக் கிடக்கும் பிள்ளைக் கறியை அள்ளிக் கொண்டு வரத் தரகர்களை ஏவி விடுகிறார்கள். புறம்போக்கைக் கண்டவுடன் விழுங்கத் துடிக்கும் அரசியல்வாதியைப் போல, பெண்களைப் பார்த்தவுடன் எச்சில் ஊறும் காமுகனைப் போல, உழைப்பை உறிஞ்சத் துடிக்கிறார்கள் முதலாளிகள்.

'வால்மார்ட்'டின் அமெரிக்க வியர்வைக் கடைகளில் சிக்கிக் கொண்ட வெளிநாட்டுத் தொழிலாளர்கள், ஒரு டாலர் கூலிக்கு நாள் முழுவதும் 'நைக்' காலணிகளைத் தயாரிக்கும் தாய்லாந்தின் சிறுவர்கள், அமெரிக்கக் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொம்மைகளை வழங்குவதற்காக, சீனத்தில் கொத்தடிமைகளாக உழைக்கும் பெண்கள், தம் கழுத்தில் தாலி ஏறுவதற்கு முன் நிபந்தனையாக, இந்தியாவின் 'ஜவுளி ஏற்றுமதி'யை ஏற்றிக் கொண்டிருக்கும் சுமங்கலித் திட்டத்தின் பெண்கள்.. இந்திய முதலாளிகளும் பன்னாட்டு முதலாளிகளும், விரும்பி நேசிக்கும் 'மனிதவளம்' இதுதான்.

உறிஞ்ச உறிஞ்ச வற்றாத இந்த மனித வளத்தின் விலை (அதாவது கூலி) இந்தியாவில் மிகக் குறைவு. மிகவும் குறைவு! ஜவுளித் தொழிலில் இந்தியா கொடி கட்டிப் பறப்பதன் இரகசியம் இதுதான். ஐ.டி தொழிலின் அசுர வளர்ச்சிக்குக் காரணமும் இதுதான்.

''அவர்கள் தொழிற்சங்கத்தை விரும்புவதில்லை. 8 மணி நேர வேலை என்ற வரம்பையும் விரும்புவதில்லை. சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருக்க விரும்பவில்லை. அவர்கள் அதிக நேரம் வேலை செய்ய விரும்புகிறார்கள். ஏனென்றால், அவர்கள் அதிகம் சம்பாதிக்க விரும்புகிறார்கள்'' என்கிறார் ஜவுளி முதலாளிகள் சங்கச் செயலர் செல்வராஜ்.

தனியார்மய தாராளமயக் கொள்கைகளை ஆதரிக்கும் ஒரு முதலாளித்துவப் பத்திரிகையாளர் இதையே வேறு விதமாகக் கூறுகிறார். ''நாம் வேலைவாய்ப்பு என்கிறோம்; கம்யூனிஸ்டுகள் சுரண்டல் என்கிறார்கள். பெரும்பான்மை மக்களோ தாம் சுரண்டப்படாமல் இருப்பதை விட சுரண்டப் படுவதையே விரும்புகிறார்கள்'' என்றார். விவசாயிகளின் கையறு நிலையையும் செல்வராஜின் குரூரத்தையும் ஒரே வரியில் கூறும் 'வக்கிரக் கவிதை' என்று இதைச் சொல்லலாமோ!

• வசந்தன்

**உறிஞ்ச உறிஞ்ச வற்றாத இந்த மனித வளத்தின் விலை (அதாவது கூலி) இந்தியாவில் மிகக் குறைவு. மிகவும் குறைவு! ஜவுளித் தொழிலில் இந்தியா கொடி கட்டிப் பறப்பதன் இரகசியம் இதுதான். ஐ.டி தொழிலின் அசுர வளர்ச்சிக்குக் காரணமும் இதுதான்.**



படிப்பகம்

www.padippakam.com



# காந்தி:

## வழிகாட்டியல்ல, சோளக்காட்டு பொம்மை

**ச**மீபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த சேலம் வேலு காந்தி எனும் 82 வயது முதியவர் உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொதுநல மனுவைத் தாக்கல் செய்தார். அம்மனுவில், சாதி நம்பிக்கையற்றோர், 'கலப்பு'த் திருமணம் செய்து கொண்டவர்கள், அனாதைக் குழந்தைகள், மதம் மாறியோர் ஆகிய நான்கு வகையினரைக் கொண்டு, 'காந்தி சாதி' என்ற ஒரு புதிய சாதியை உருவாக்க உத்தரவு தருமாறு நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்தார். இதன் மூலம் சாதிகள் ஒழிய வழிபிறக்கும் என வாதிட்டார். அரசியல் சாசனத்தின் அடிப்படையில், ஒரு புதிய சாதியை உருவாக்க தமக்கு அதிகாரம் இல்லையெனக் கூறி, நீதிபதிகள் அம்மனுவைத் தள்ளுபடி செய்தனர்.

நாமகரணங்கள் நமக்கு புதியனவல்ல. ஹரியின் குழந்தைகள் எனப் பெயர் சூட்டினார் காந்தி. காந்தியின் குழந்தைகள் எனப் பெயர் சூட்ட வேண்டுமென ஆதங்கப்படுகிறார் காந்தியின் சீடர். பெயர் சூட்டுவதிருக்கட்டும். 'பீ'யள்ளப் போவது யார் என்பதல்லவா கேள்வி. அன்றே காந்தியின் சாதி ஒழிப்பு சண்ட பிரசண்டங்களுக்கும், அவரது நடைமுறைக்குமான முரண்பாட்டை அம்பேத்கர் திரை கிழித்திருக்கிறார். ஆனால், காந்தி தனது வாழ்நாள் முழுவதும் அம்பேத்கர் எழுப்பிய கேள்விகளுக்கு நேரடியாக பதிலளிக்கவில்லை.

குறைந்தபட்சம் காங்கிரசில் உறுப்பினராக சேர தீண்டாமையைக் கடைப்பிடிக்கக் கூடாது என ஒரு விதியைக் கொண்டு வருவதற்குக் கூட காந்தி தயாராக இருந்ததில்லை. காந்தியால் சோசலிசத்திற்கு மாற்றாக வைக்கப்பட்ட தருமகர்த்தா முறையை நடைமுறைப்படுத்தக் கிளம்பிய வினோபா பாவேயின் பூமிதான இயக்கத்தின் தோல்வி காந்தியத்தின் தோல்வியல்ல என்பது போல மூடி மறைக்கப்பட்டு விட்டது. எனினும் காந்தி மீண்டும் மீண்டும் மக்கள் அரங்கில் முன்நிறுத்தப்படுவது மட்டும் இன்றளவும் நின்றபாடில்லை.

ஆனால், காந்தி சொன்ன கிராமப் பொருளாதார முறையை 1947-லேயே காங்கிரசு கைக்கொள்ளவில்லை. காங்கிரசைக் கலைக்கச் சொன்ன காந்தியின் யோசனையை ஒரு பொருட்டாகக் கூட எவரும் கருதவில்லை. குடும்பக் கட்டுப்பாடு கூடாது, ஆலைத் தொழில்கள் கூடாது போன்ற 'அற்புதமான' கருத்துக்களை மட்டுமல்ல; ஜனாதிபதி மாளிகையை இலவச மருத்துவமனையாக்க வேண்டுமென்ற தேசப்பிதாவின் 'சின்ன சின்ன ஆசைகளை'க் கூட யாரும் கண்டு கொள்ளவில்லை.

எனினும், ஐநூறு ரூபாய் நோட்டிலும், காந்தி ஆசிரமங்களிலும், நாடு முழுவதிலுமுள்ள சிலைகளிலும், அரசாங்க உரைகளிலும் காந்தி ஒரு மந்திரம் போல தொடர்ந்து நிலைநிறுத்தப்படுகிறார். காந்தி பிறந்த குஜராத்தில் திரையிட மறுக்கப்பட்ட 'பர்சானியா' திரைப்படம், குஜராத் முசுலீம் இனப் படுகொலையால் மனம் உடைந்து போகிற ஒரு வெளிநாட்டு காந்திய மாணவனை கதாபாத்திரமாகக் கொண்டிருந்தது. சோனியா காந்தியோ சத்தியாக்கிரகத்தின் 'மகிமையை', 'உலகப் பொருளாதார மன்ற'த்தில் வியந்தோதுகிறார்.



காந்தியால் மீண்டும் மீண்டும் குழப்பப்பட்ட சத்தியாக்கிரகம், இன்றும் கூட மக்கள் எதிர்ப்பை மழுங்கடிப்பதில், வன்முறை குறித்த நியாயத்திற்கு அப்பாற்பட்ட தார்மீக அச்சத்தை உருவாக்குவதில் முன் நிற்கிறது. மணிப்பூரில், இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களுக்கு எதிராக, இந்திய அரசின் கொடூரச் சட்டமான 'ஆயுதப் படைகளுக்கான சிறப்பு அதிகாரச் சட்டத்தை' திரும்பப்பெறக் கோரி, கடந்த ஏழு ஆண்டுகளாக உண்ணாவிரதமிருந்து வரும் ஐரோம் சர்மிளா இதற்கு ஒரு உதாரணம். சர்மிளா செத்துப் பிணமானால் கூட இந்திய அரசு அச்சட்டத்தை திரும்பப் பெறப் போவதில்லை.

காந்தியின் தெளிவற்ற, மூடு மந்திரமான மதச்சார்பின்மை 1947 பிரிவினையின்போதே படுதோல்வியடைந்த போதிலும், இன்றும் காங்கிரசாலும், போலி கம்யூனிஸ்டுகளாலும் உதாரணமாக முன்வைக்கப் படுகிறது. ஷாபானு வழக்கிலும், ராம ஜென்ம பூமி விவகாரத்திலும், குஜராத் படுகொலையிலும் காந்திய மதச்சார்பின்மை வெங்காயம் மொத்தமாய் உரிந்து போனது. காவிப் படையின் கொலை வெறியாட்டத்திற்கு சொல்லில் மௌன சாட்சியாகவும், செயலில் நம்பகமான கூட்டாளியாகவும் காங்கிரசு துணை போனது. ஆனால், இன்னமும் மதச்சார்பின்மைக்கு போலித்தனமான நடுநிலைமையே விளக்கமாக அளிக்கப்படுகிறது.

உண்மையில், காந்தி வாழ்ந்த காலத்திலேயே காந்தியம் தோற்றுப் போய் விட்டது. ஆனால் அந்த உண்மைகள் மூடி மறைக்கப்படுகிறது. அரை உண்மைகள் ஊதிப்பெருக்கப் படுகின்றன. பொய்கள் அதிகாரப்பூர்வ வரலாறாகிறது. அப்படித்தான் நாம் காந்தியை ஏற்றுக் கொள்ளச் செய்யப் பட்டிருக்கிறோம். அவ்வாறு மூடி மறைக்கப்பட்ட சில வரலாற்று உண்மைகளின் ஒளியில், இப்பொய்களை அடையாளம் காண்போம்.

•••

**கா**ந்தி அவரது காலத்திலேயே தமது முரண்பாடுகளுக்காக மிகப் பலரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். ஒரு விவாதத்தில், "எனது முரண்பட்ட நிலைகளைக் குறித்த நிறைய குற்றச்சாட்டுக்களை நான் படித்திருக்கிறேன். கேட்டிருக்கிறேன். ஆனால், அவற்றிற்கு நான் பதில் கூறுவதில்லை. ஏனெ


படிப்பகம்

www.padippakam.com

னில், அவை வேறு யாரையும் பாதிப்பதில்லை. என்னை மட்டுமே பாதிக்கின்றன'' என காந்தி எழுதினார். ஆனால், இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கித் தரும் 'பொறுப்பை' ஏற்றிருந்த காந்தியின் முரண்பட்ட நிலைகள் எவ்வாறு இந்த நாட்டின் ஒட்டுமொத்த எதிர்காலத்தையே பாதித்தது என்பதைத்தான் வரலாறு காட்டுகிறது.

அகிம்சைதான் காந்தியத்தின் அடிப்படைக் கொள்கையாகச் சொல்லப்படுகிறது. உலகிலேயே முதன்முறையாக காந்தி கண்ட அறவழிப் போராட்ட முறையாக சத்தியாக்கிரகம் முன் வைக்கப்படுகிறது. ஆனால், உலக வரலாற்றில், நியாயமான கோரிக்கைகளுக்காக, எதிர்த்துத் தாக்காமல், துன்பங்களை தாமே முன்வந்து ஏற்றுக் கொள்ளும் சாத்வீகப் போராட்ட முறை இயேசு, துவக்க கால கிறிஸ்தவர்களிலிருந்து ரசியாவின் டியூகோபார்கள் எனப்படும் பிரிவினர் வரை பலரால் ஏற்கெனவே கைக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், காந்தி தனது சத்தியாக்கிரக முறை சாத்வீக போராட்ட முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதென விடாப்பிடியாக சாதித்தார்.

'காந்தியும் அவரது காலங்களும்' என்ற நூலில் காந்தியம் எனும் கருத்தாக்கம் உருவான முறையை சாரமாக எழுத்தாளர் மன்மத்நாத் குப்தா இவ்வாறு குறிப்பிடுகிறார். ''புத்திசாலித்தனமாக கணக்கற்ற தார்மீக, தத்துவார்த்த, ஆன்மீகச் சரடுகளை சுற்றிக் காட்டியதன் மூலம், முந்தைய சாத்வீக இயக்கங்களிலிருந்து சத்தியாக்கிரகம் மாறுபட்டதென காட்ட முயன்றார். நூற்றாண்டுகளைக் கடந்த இந்துக் கலாச்சாரத்தின் மீதேறி சுலபமாகப் பயணிக்க முயன்றார். அவரே ஒத்துக் கொண்டதைப் போல, இதற்கு தேவையான தயாரிப்புகள் இல்லாத போதும், வறட்டுப் பிடிவாதத்தின் மூலமாக மட்டுமே அவரால் தனக்கென ஒரு கருத்தாக்கத்தை உருவாக்க முடிந்தது.''

தமது ஆன்மீகச் சொல்லாடல்களின் மூலம் எக்கருத்தையும் தனக்கேற்ற முறையில் காந்தியால் வளைக்க முடிந்தது. சிறையிலிருக்கும் புரட்சியாளனின் உண்ணாவிரதத்தைக் கூட காந்தி 'வன்முறை' என்றார். ஏனெனில் அவனது உள்ளத்தில் வன்முறை இருக்கிறதாம். நிலப்பிரபுக்களுக்கு விவசாயிகள் வரி கொடுக்க மறுத்து, சாத்வீக முறையிலேயே போராடிய போதும் கூட, அது வன்முறை என்றார்.

**காந்தியால் மீண்டும் மீண்டும் குழப்பப்பட்ட சத்தியாக்கிரகம், இன்றும் கூட மக்கள் எதிர்ப்பை மழுங்கடிப்பதில், வன்முறை குறித்த நியாயத்திற்கு அப்பாற்பட்ட தார்மீக அச்சத்தை உருவாக்குவதில் முன் நிற்கிறது.**

இவ்வாறு வன்முறைக்கும், அகிம்சைக்கும் கணக்கற்ற விளக்கங்கள் அளித்த காந்திதான், தென்னாப்பிரிக்காவில், முற்றிலும் அநீதியான வகையில் ஜூலு கலகப் போரிலும், போயர் யுத்தத்திலும், முதல் உலகப் போரிலும், பிரிட்டிஷ் சிப்பாய்களுக்கு ஆம்புலன்ஸ் சேவை செய்தார். இதனைக் கேள்வி கேட்டவர்களுக்கெல்லாம், ''இதன் மூலம் பிரிட்டிஷ் பிரஜை என்ற முறையில் தமது கடமையை ஆற்றினால்தான், உரிமைகளைப் பெற முடியும்'' என விளக்கமளித்தார்.

முதல் உலகப் போரில் ஆங்கிலப் படைகளுக்கு சேவை செய்த பொழுது, அவரது நெருங்கிய நண்பர்களே அவரை விமர்சித்ததற்கு, ''போரில் பங்கேற்பது என்பது அகிம்சையோடு ஒருக்காலும் பொருந்தாது என்பதை நானறிவேன். ஆனால் ஒருவருக்கு அவரது கடமைகள் குறித்து, எல்லாச் சமயங்களிலும் தெளிவான பார்வை பெற வாய்ப்புகள் இருப்பதில்லை. சத்தியத்தின் பாதையில் பயணிப்பவன் பல சமயங்களில் இருட்டில்தான் செல்ல வேண்டியிருக்கிறது'' என நியாயம் கற்பித்தார்.

பின்னர், 1921-இல் தமது கண்கள் திறந்து விட்டதாகவும், அவ்வாறு கருதியது தவறு என்றும், பிரிட்டிஷ் அரசு தம்மை பிரஜையாகவே கருதவில்லையென்றும், எந்த உரிமைகளும் அற்ற ஒரு தாழ்த்தப்பட்ட பராரியாகவே இந்த அரசின்கீழ் தான் உணர்வதாகவும் 'யங் இந்தியா'வில் குறிப்பிட்டார். ஆனால், அக்கண்கள் நீண்டநாள் திறந்திருக்கவில்லை. மீண்டும் 1928-இல் முதல் உலகப் போரின் பங்கேற்பு குறித்த நிருபர்களின் கேள்விக்கு, ''போருக்கு எதிராக என்னுள் இப்பொழுது இருக்கும் அதே அளவிலான எதிர்ப்புணர்வு அப்பொழுதும் இருந்தது. ஆனால், இந்த உலகத்தில் நாம் விரும்பாத பல விசயங்களை நாம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.'' பச்சை அயோக்கியத்தனத்தை இயலாமையாகக் காட்டித் தப்பிக்க முயலும், அறிவு நாணயமற்ற மனிதனால் மட்டுமே இவ்வாறு விளக்கம் அளிக்க முடியும்.



''சுதந்திரம் என ஒன்று வருமானால், அது மாபெரும் பிரிட்டிஷ் அரசுடன் ஒரு கண்ணியமான ஒப்பந்தத்தின் மூலமே வரவேண்டும்'' என 1929-இல் காந்தி எழுதினார். காந்திய சுதந்திரப் போராட்டத்தின் சாராம்சத்தை, அதன் திசைவழியை, இந்த ஒற்றை வரியை விட வேறெதுவும் விளக்கிவிட முடியாது. காந்தி முரண்பாடற்று, கடைபிடித்த ஒரே கொள்கை இதுதான். ஏனெனில், சுதந்திரம் மக்களால் சமரசமற்று வென்றெடுக்கப்படுமாயின், அது பிரிட்டிஷ் ஆட்சியை மட்டுமல்ல, முதலாளிகளையும், நிலப்பிரபுக்களையும் மட்டுமல்ல, தன்னையும் சேர்த்தே தூக்கி எறிந்து விடும் என்பதை காந்தி தெளிவாக அறிந்திருந்தார். அதனால்தான், நடைமுறையில் மக்கள் சக்தியின் இயல்பான கோபாவேசத்தின் சிறுபொறி எழும்பினால் கூட, உடனடியாக அப்போராட்டத்தையே கைவிட்டு மக்களை திகைத்துப் பின்வாங்கச் செய்தார்.

இதனை 1921 ஒத்துழையாமை இயக்கம் முதல் 1942 தனிநபர் சத்தி


படிப்பகம்

www.padippakam.com

யாக்கிரகம் அல்லது வெள்ளையனே வெளியேறு இயக்கம் வரை, நாம் காண முடிகிறது. காந்தி நடத்திய மூன்று இயக்கங்களிலும், போராட்டத்தின் போக்கில் மக்கள் போலீசு மீது எதிர்த் தாக்குதல் தொடுப்பதும், அவர்களைச் சிறை பிடிப்பதும், அரசுச் சொத்துக் களை நாசப்படுத்துவதும் தன்னியல் பாக நிகழ்ந்தது.

1921-இல் செளரி செளரா-ன் விவசாயிகள் காவல் நிலையத்திற்கு தீ வைத்ததையொட்டி, ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தியதாக இருக்கட்டும்; 1930-இல் மக்களின் போராட்டத் தீ பற்றி எரிந்த வேளையில் வைஸ்ராய் இர்வினோடு ஒருதலைப்பட்சமான ஒப்பந்தத்திற்கு முன்வந்து, போராட்டத்தை கைவிட்டதாக இருக்கட்டும்; 1942-இல் 'தான் எந்தப் போராட்டத்தையும் அறிவிக்கவில்லை. மக்களது வன்முறைக்கு தாம் பொறுப்பல்ல' என ஆகஸ்டு போராட்டத்தை கைகழுவியதாக இருக்கட்டும், காந்தியின் வன்முறைக்கெதிரான பரிசுத்த வேடத்திற்குள், போராட்டம் தனது கைகளிலிருந்து நழுவ விடக்கூடாதென்ற இடையறாத அச்சம் ஒளிந்து கொண்டிருந்தது.

காந்தியப் போராட்டத்தினுடைய வர்க்கச் சார்பு முதலாளிகளையும், வணிகர்களையும் சார்ந்திருந்தது தற்செயலானதல்ல. அகமதாபாத் ஆலைத் தொழிலாளர் போராட்டத்தின் அனுபவத்திலிருந்தும், பர்தோலி விவசாயிகளின் வரிகொடா இயக்க போராட்டத்திலிருந்தும், தொழிலாளர், விவசாயிகளின் வர்க்க கோரிக்கைகளுக்காக போராடுவதும், அவர்களை விடுதலைப் போராட்டத்தில் களமிறங்கச் செய்வதும் அபாயகரமானது எனத் தான் உணர்வதாக காந்தி வெளியிட்ட அறிக்கைகளை, அன்றே தமது 'இளம் அரசியல் தொண்டர்களுக்கு' எனும் கட்டுரையில் மாபெரும் புரட்சியாளர் தோழர் பகத்சிங் சுட்டிக் காட்டினார். சுருக்கமாகச் சொன்னால், காந்தியப் போராட்டத்தின் வர்க்க உள்ளடக்கம் தான் அப்போராட்டத்தின் வடிவத்தையும் வரம்புகளையும் தீர்மானித்தது. அகிம்சை, சத்தியாக்கிரகம் என்பதெல்லாம் வெறுமனே வார்த்தைப் பூச்சுக்கள் மட்டுமே.

1929-இல் சுதந்திரம் கிடைக்காமலேயே சுதந்திரக் கொடியேற்றும் கோமாளித்தனத்தை அரங்கேற்றினார், காந்தி. வீரதீரமாக 'முழுச் சுதந்திரமே இலட்சியம்' என்று அறிவித்த கையோடு வைஸ்ராய்க்கு எழுதிய நீண்ட கடிதத்தில், ''என்னால் இயன்ற வரை, தங்களுக்கு எத்தகைய அனாவசியமான தர்மசங்கடத்தையும் ஏற்படுத்தும் எண்ணம் எனக்கில்லை'' எனக் குழைந்தார். வைஸ்ராய், ஒரு அலட்சியமான பதிலை வீசியெறிந்தார். ''நான் மண்டியிட்டு உணவு கேட்டேன். ஆனால், எனக்கு கல்தான் கிடைத்திருக்கிறது'' எனப் புலம்பினார் காந்தி. வைஸ்ராய்க்கு 'தர்மசங்கடத்தை' ஏற்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை காந்திக்கு ஏற்பட்டுவிட்டது. அந்த தர்மசங்கடத்திற்கு பெயர் தான் 'தண்டி யாத்திரை'.

ஆனால், ஆங்கில அரசு குயுக்தியாக காந்தியின் சகாக்களை கைது செய்தது; காந்தியை மட்டும் கைது செய்யாமல் விட்டு, அவரைச் சிறுமைப்படுத்தியது. உடனே அகிம்சாமூர்த்தி ஒரு அழகான தந்திரம் செய்தார். உப்புக் கிடங்குகளைச் சோதனையிட்டு, உப்பைப் பறிமுதல் செய்ய முடிவு செய்தார். வேறு வழியின்றி, அவரை அரசு கைது செய்ய நேர்ந்தது. பறிமுதல் செய்வது சத்தியாக்கிரகம் என்றால், வங்கியை கொள்ளையடிப்பது கூட சத்தியாக்கிரகம் தானே? 'தனது தலைமையை காப்பாற்றிக் கொள்வது' என்ற ஒரே நோக்கத்துக்காகத்தான், சத்தியாக்கிரக வடிவத்தைக் கைவிட்டு, 'பறிமுதல்' என்ற போராட்ட வடிவத்துக்கு மாறினார் காந்தி. அதே நேரத்தில், ''உப்பை மட்டுமல்ல, மொத்த சுதந்திரத்தையுமே பறித்தெடுக்க வேண்டும்'' என்று கூறிய பகத்சிங் முதலான புரட்சியாளர்களை, 'தீவிரவாதிகள், வன்முறையாளர்கள்' என்றார் காந்தி.

சட்ட மறுப்பு இயக்கத்தை 'இரகசியம்' சூழ்ந்து விட்டதாகக் கூறி, காந்தி அதனைக் கைவிட்டு, இர்வினிடம் பேச்சுவார்த்தை என்ற பெயரில் சரணாகதி அடைந்த பொழுது, ''ஒரு அரசியல் தலைவர் என்ற முறையில் காந்தி தோல்வி அடைந்து விட்டதாக நாங்கள் ஐயமின்றிக் கருதுகிறோம். தனது வாழ்நாள் கொள்கைகளுக்கே முரணின்றி நடக்க இயலாத காந்தி மேலும் தலைவராக நீடிப்பது நியாயமற்றது'' என சுபாஷ் சந்திர போஸூம், வித்தல்பாய் படேலும் வியன்னாவிலிருந்து பகிரங்கமாக அறிக்கை விடுத்தனர். இருப்பினும் பார்ப்பன-பனியாக் கட்சியான காங்கிரசுக்கு, மக்களை ஏய்க்க காந்தியின் 'முகமூடி' தேவைப்பட்டது. ஆங்கில அரசுக்கோ, இத்தகைய விசுவாசமான 'எதிரி' கிடைத்ததை விட வேறென்ன மகிழ்ச்சி இருக்க முடியும்?

இவ்வாறு முப்பதாண்டுகளுக்கும் மேலாக, ஆளும் வர்க்கத்தின் மனம் நோகாமல், காந்தி நடத்திய 'அரசியல் பரிசோதனை'களுக்கு 'சோதனைப் பிராணி'களாக இந்திய மக்கள் அடிபட்டார்கள். உதைபட்டார்கள். இரத்தம் சிந்தினார்கள். சொத்துக்களை இழந்தார்கள். சிறையில் வாடினார்கள். ஒவ்வொரு போராட்டத்தின் கழுத்தறுப்பிற்கு பிறகும் விரக்திக்கும், வேதனைக்கும் தள்ளப்பட்டார்கள். இதைவிடக் கொடூரம், ''போராட்டத்தின் தோல்விக்கான காரணம், மக்களின் ஆத்ம சுத்தி போதவில்லை'' என காந்தி சொன்ன குற்றச்சாட்டையும் மௌனமாக ஏற்றுக் கொண்டார்கள்.

1942-இல் யுத்தத்தில் ஜெர்மனி-ஜப்பான் முகாம் வெற்றி பெறலாம் என்ற கணிப்பில், அரை மனதோடு, காந்தி 'வெள்ளையனே வெளியேறு' முழக்கத்தை முன்வைத்த மறுகணமே, காங்கிரசின் அனைத்து முக்கியத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். இம்முறை மக்களின் போர்க்குணம் முழுமையாக வெளிப்பட்டது. தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன. ரயில் தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன. போலீசும், இராணுவமும் தாக்கப்பட்டனர். ஷோலாப்பூர் போன்ற பல இடங்களில் இராணுவமோ, போலீசோ பல நாள்களாக உள்ளே நுழையக் கூட முடியவில்லை. கொடூர அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

**காந்தியின் பிம்பம், இன்றளவும் பாதுகாக்கப் படுகிறதென்றால், அதற்கு கோட்சேயின் நடவடிக்கைதான் உதவி செய்தது என்று சொல்ல வேண்டும். காந்தியம் வெளுத்து, அதன் பூச்சுக்கள் உதிர்ந்த நிலையில், காந்தி ஒருவேளை தொடர்ந்து வாழ்ந்திருப்பாரேயானால், காந்தியம் தவிர்க்கவியலாமல் செத்துப் போயிருக்கும்.**


படிப்பகம்


www.padippakam.com

'காங்கிரசு சோசலிஸ்டுகள்'தான் வன்முறைக்கு காரணமென்று, காங்கிரசுத் தலைவர்கள் ஆள்காட்டி வேலையில் ஈடுபட்டார்கள். எதற்கும் உதவாத அகிம்சையை, மக்கள் நடைமுறையில் வீசியெறிந்தனர். சிறையிலிருந்து விடுதலையான காந்தி, போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தார். 1921-இல் ஒத்துழையாமை இயக்கத்தின் பொழுது, சாதி, மத வேறுபாடு களற்று நாடே கிளர்ந்தெழுந்த பொழுது, சுதந்திரம் வாயிற்படி வரை வந்ததென்றால், 1942-இல் சுதந்திரம் வீட்டிற்குள்ளேயே கால் வைத்தது. ஆனால் இந்த முறையும் காந்தி அதன் காலை வாரிவிட்டார்.

தலைமையை விஞ்சி எழும்பும் மக்களின் போர்க்குணத்தை அதன் திரண்ட வடிவத்தில் 1942-இல் காந்தி கண்டார். அதனால்தான் பின்னர் பிரிவினைக் கோரிக்கை எழுந்த பொழுது, பிரிவினைக் கோரிக்கையை ஆதரிப்பதைத் தவிர காந்திக்கு வேறு வழி இருக்கவில்லை. ஏனெனில் இன்னொரு 'மக்கள்திரள் அரசியல் போராட்டம்' என்பது ஒட்டுமொத்த நிறுவனத்தையும் பெயர்த்தெடுக்காமல் அடங்காது என்பதைக் காந்தி புரிந்து கொண்டார். பிரிவினைக் கோரிக்கையை ஏற்பதற்கான காங்கிரசுத் தீர்மானத்தின் முன்மொழிவில், இதனைக் குறிப்பிடவும் செய்தார்.

பிரிவினைக் காலத்தில், கலவரம் நடந்த ஒவ்வொரு இடத்திற்கும் காந்தி சென்றார். ஆனால், அவரது சமரச முயற்சிகளும், போதனைகளும் இந்து மகா சபா வெறியர்களிடமும், முசுலீம் லீக் வெறியர்களிடமும் எடுபடவில்லை. காந்தியின் ஆத்மார்த்த சீடர் ஆச்சார்ய கிருபாளனியே, காந்தியினுடைய முயற்சிகளின் பலனைக் கீழ்க் காணும் முறையில் விவரிக்கிறார். ''அவர் நவகாளிக்கு சென்றார். அவரது முயற்சிகளால் நிலைமை சற்றே முன்னேறியது. இப்பொழுது பீகாரில் இருக்கிறார். நிலைமை சற்று மேம்பட்டுள்ளது. ஆனால் பஞ்சாபில் கொழுந்துவிட்டெரியும் வன்முறையில் எந்த மாற்றமும் இல்லை. மொத்த இந்தியாவிற்கான இந்து-முசுலீம் ஒற்றுமைப் பிரச்சினையை பீகாரில் தீர்க்கப் போவதாகக் கூறுகிறார். ஒருவேளை அவ்வாறு நடக்கலாம். ஆனால் அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவார் என்பது சிக்கலாகவே தோன்றுகிறது. சாத்வீகமாக நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தைப் போல, இலக்கை அடைவதற்கான எத்தகைய தீர்க்கமான வழிமுறைகளும் இதில் இல்லை.'' பின்னர், ''பீகாரில் தங்களது அகிம்சை எவ்வாறு வேலை செய்தது?'' எனக் கேட்ட பொழுது ''அது வேலையே செய்யவில்லை. மோசமாகத் தோல்வியடைந்தது'' என்றார் காந்தி.

காந்தியின் ஆசிரமம் தாக்கப்பட்டது. தில்லியில் நடத்திய கடைசி உண்ணாவிரதத்தின் இறுதியில் காந்தி ''நான் எனது ஓட்டாண்டித்தனத்தை ஒத்துக் கொள்கிறேன்'' என தனது இயலாமையை வெளியிட்டார். அகிம்சையின் தந்தை காஷ்மீருக்கு படைகள் அனுப்ப ஆதரவளித்தார். தான் சர்வாதிகாரியாக இருந்தால், மதத்தையும் அரசியலையும் பிரிப்பேன் என்றார். அடுத்த கணமே, ''மதம்தான் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். வார இறுதி விசயமாக அல்லாமல், ஒவ்வொரு நொடியும்



மதத்திற்காகச் செலவிடப்பட வேண்டும்'' என்றார். காந்தியால் தனது அரசியல் வாரிசாக அறிவிக்கப்பட்ட நேரு, 'காந்தியின் பொருளாதாரக் கொள்கைகள் காலங்கடந்தவை' என அவருக்கே கடிதம் எழுதினார். ''காந்தி தனது இறுதி நாள்களில் இருளில் தடுமாறிக் கொண்டிருந்தார்'' எனத் தெரிவிக்கிறார் கிருபாளனி.

இதே காலகட்டத்தில் இந்திய தேசிய இராணுவம் தொடுத்த தாக்குதல்களும், 1945 கப்பற்படை எழுச்சியும், தொழிலாளர் போராட்டங்களும் காந்தியின் அரசியல் முடிவை முன்னறிவித்தன. இரண்டாம் உலகப் போரில் பலவீனமடைந்த ஆங்கில அரசு, நேரடியாகத் தனது காலனிகளை இனிமேலும் அடக்கியாள முடியாது என்ற நிலையில், இந்தியா, இலங்கை மற்றும் பிற காலனிகளின் தரகு முதலாளிகளுக்கு ஆட்சிப் பொறுப்பைக் கைமாற்றிக் கொடுக்க முன்வந்தது.

அரசியல் அரங்கத்தால் புறந்தள்ளப்பட்ட காந்தியின் பிம்பம், இன்றளவும் பாதுகாக்கப்படுகிறதென்றால், அதற்கு கோட்சேயின் நடவடிக்கைதான் உதவி செய்தது என்று சொல்ல வேண்டும். காந்தியம் வெளுத்து, அதன் பூச்சுக்கள் உதிர்ந்த நிலையில், காந்தி ஒருவேளை தொடர்ந்து வாழ்ந்திருப்பாரேயானால், காந்தியம் தவிர்க்கவியலாமல் செத்துப் போயிருக்கும். கத்தியின்றி, இரத்தமின்றி, சுதந்திரத்தின் கழுத்தறுத்ததுதான், 'காந்தி' எனும் ஊதிப் பெருக்கப்படும் 'சோளக்காட்டுப் பொம்மை'யின் சுருக்கமான அரசியல் வரலாறு.

''என்னதான் இருந்தாலும், காந்தியிடமிருந்து பின்பற்றுவதற்கு எதுவுமே இல்லையா?'' என அரசியல் பொழுதுபோக்காளர்கள் கேட்கக் கூடும். காந்தியிடமிருந்து நாம் பின்பற்ற எதுவுமில்லை. ஆனால், 'வாடிக்கையாளரே நமது எசமானர்' என்ற அவரது பொன்மொழியை மட்டும், கட்சிப் பாகுபாடின்றி சகல இந்திய ஓட்டுச் சீட்டு அரசியல்வாதிகளும் இம்மி பிசகாமல் பின்பற்றுகிறார்கள். அவர்கள் மக்களைத் தமது எசமானர்களாகக் கருதுவதில்லை. பன்னாட்டு முதலாளிகள் என்ற தமது வாடிக்கையாளர்களைத் தான் எசமானர்களாகக் கருதுகிறார்கள். இந்த விசயத்தில் குருவை மிஞ்சிய சீடர்களாகவும் நடந்து கொள்கிறார்கள். அந்த வகையில் காந்தியம் இன்னமும் உயிரோடிருக்கிறது என்பது உண்மை தான்.

● வாணன்


படிப்பகம்

www.padippakam.com

# கலைஞர், ஸ்ரீராமன் மற்றும் சில இலக்கிய வானரங்கள்

ஒரு சமயம் 'காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார்' திருவாரூர் 'விஜயம்' செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவரை எதிர்ப்பது என்று எங்கள் கட்சியின் (திராவிடர் கழகம்) பெரியவர்கள் திரு. சிங்கராயர், 'தண்டவாளம்' ரங்கராஜு ஆகியோர் முடிவு செய்து விட்டார்கள்... ஒட்டகம், யானை, பதாகை ஏந்திய சில வீரர்கள், இந்த வரிசைகளுக்குப் பிறகு ஒரு பல்லக்கில் சங்கராச்சாரியார் பவனி வருவது வாடிக்கை! அதே போல பவனி வந்து கொண்டிருக்கிறார். திடீரென ஒரு குரல், ''மானங்கெட்ட பசங்களா! இந்த ஆசாமியைத் தூக்க நீங்கதான் கிடைச்சிங்களா? ஏன்! பாப்பான்க தூக்கினாலென்ன?'' என்று கேட்டது.... ''இறக்கி வைச்சிட்டு எல்லாப் பசங்களும் ஓடுறீங்களா? இல்லே இந்தச் சாட்டையால் வெளுக்கட்டுமா?'' என்று ஏதோ ஒரு அடியாட்கள் கும்பலோடு நிற்பது போல 'தண்டவாளம்' நின்று கொண்டு 'பாவ்லா' காட்டலானார்! அவ்வளவுதான் பல்லக்கை வைத்து விட்டுப் பல்லக்குத் தூக்கிகள் இங்கொருவர் அங்கொருவராகப் பாய்ந்து ஓடி விட்டனர்.''

''எங்கள் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பது, நன்கொடையெல்லாம் வழங்குவது முதலிய காரியங்களைச் செய்த 'ஜஸ்டிஸ்' கட்சிப் பிரமுகர் இராமானுஜ முதலியார் வீட்டில்தான் சங்கராச்சாரியார் ''காம்ப்'' போட்டிருந்தார். அவரைப் போய்ப் பார்ப்பதென்றால் சட்டை போட்டிருக்கக் கூடாது! 'தண்டவாளம்' ஒரு நோட்டீஸ் அடித்தார்.

சங்கராச்சாரியார் சுவாமிகளைப் பார்க்கச் சட்டை போட்டிருக்கக் கூடாது, ஆண்கள்! ரொம்பச் சரி! பெண்கள் மட்டும் இரவிக்கை போட்டுக் கொண்டு போகலாமா? அதென்ன நியாயம்?'' என்கிற வாசகங்களோடு.

யார் எழுதிக் கொடுத்திருப்பார்கள் என்று சொல்லவா வேண்டும்? (கலைஞர்).


திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள், ''தமிழ்நாட்டில் பெரியார் என்கிற நச்சாறு ஓடுகிறது'' என்று சொல்லி விட்டார். இந்தச் சமயம் பார்த்து திருவாரூர் தியாகராஜப் பெருமாள் கோயிலில் (1.4.44 என்று நினைவு) அவருடைய ''உபன்யாசங்கள்'' நடைபெறும் என்று அறிவித்திருந்தார்கள். கருணாநிதி சும்மா இருப்பாரா? அவருடைய கைவண்ணத்தில் ''கிருபானந்த வாரியாருக்குச் சில கேள்விகள்'' என்கிற தலைப்பில் துண்டு நோட்டீஸ் தயாராகியிருந்தது.

'அன்பே சிவம் என்கிறீர்களே! 6000 சமணர்களைக் கழுவிலேற்றிச் சித்திரவதை செய்தது உங்கள் சிவ மதமல்லவா?'

'முற்றும் துறந்தவராகக் காட்டிக் கொள்ளும் உமக்கு, கழுத்திலே தங்கம் போட்ட கொட்டை ஏன்? மார்பெல்லாம் ஆபரணாதிகள் ஏன்? காய்ச்சிய பாலும் கற்கண்டும் ஏன்? கார் ஏன்? இரயில் ஏன்?' இப்படிக் கேள்விகள்.

வாரியார் சுவாமிகள் சுவாரஸ்யமாகப் பேச ஆரம்பித்தார்.

''அன்புதான் சிவம். சிவம்தான் அன்பு. 'எங்கும் அன்பு தழைக்க வேண்டும்', என்பதுதான் எம்பெருமானின்



கருணை உள்ளம். பாருங்கள்! என்னென்னவோ உண்டாக்கியிருக்கலாம் அல்லவா எம்பெருமான்? மனிதன் சாப்பிடுவதற்கு எதை உண்டாக்கினார் பாருங்கள்! காய்கறிகளை!!.. கத்தரிக்காய்... வெண்டைக்காய்...''

''அது சரி சுவாமிகளே! அதே எம்பெருமான் சிங்கத்திற்காக எந்த உணவை உண்டு பண்ணினார்?'' - கணீரென்று கேள்வி எழும்பியது! யாருடைய குரல் என்று கூற வேண்டுமா? (கலைஞர்) வாரியார் கொஞ்சநேரம் திகைத்து பேச்சை நிறுத்தினார். முன் கூட்டியே ஏற்பாடு செய்தபடி, நாங்கள், ''பதில் சொல்! பதில் சொல்!'' என்று கத்தலானோம். எங்களை எல்லாம் போலீஸ் துரத்தியது. எங்கள் வேலை முடிந்தது என்று எடுத்தோம் ஓட்டம்! அது முதல் பந்தோபஸ்து இல்லாமல் கோயிலில், 'உபன்யாசங்கள்' நடப்பது இல்லை.

—(இராம. அரங்கண்ணலின் 'நினைவுகள்' என்ற புத்தகத்திலிருந்து...)

இந்தப் பரம்பரையில் அல்லது வழியில் வந்த கலைஞர், 'பேடி ராமனை' ('பேடி' பட்டம் உபயம் திருமதி சீதா ராமன்) பற்றிச் சொன்ன கருத்துக்கு ''கருணாநிதியின் தலையை கொண்டு வருவோர்க்கு தக்க சன்மானம்'' என்றான் வேதாந்தி. அதைக் கேட்ட தி.மு.க. தொண்டர்கள் கோப முற்றதைப் பார்த்து, 'தங்கள் தலை போய்விடுமோ?' என்று தேவையற்ற பயம் கொண்டு, பா.ஜ.க.வின் எச்.ராஜாவும், குமாரவேலும் அலறினார்கள்.

ஆளானப்பட்ட வஸ்தாதுகளே இப்படி அரண்டு போய்க் கிடக்க, சில இலக்கியத் 'தறுதலைகள்', ''ஏய், எங்க ராமனை பத்தியே தப்பா வாடா பேசுறீங்க'' என்கிற ரீதியில் களம் இறங்கியிருக்கிறார்கள். அதில் குறிப்பிடத்தக்கவர்கள், இலக்கிய உலகின் 'இல.கணேச'னான மாலனும், இலக்கிய உலகின் 'புரட்சித்தலைவி' வாஸந்தியும்.

'புதிய பார்வை' என்ற பத்திரிக்கையில் (ரொம்ப புதிய்ய்ய பார்வைய்ய்யா), 'ராமர் பாலம்; கலைஞர் பேசியது சரிதானா?' என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறாரு மாலன். வேதாந்தியோட கருத்தையே வேறு வார்த்தைகளில்.... இது மாமாவோட வெர்ஷன்.

'தீராநதி' என்ற பத்திரிக்கையில் 'இராமனுக்கான போர்' என்ற தலைப்


படிப்பகம்

www.padippakam.com

பில் ஒரு 'பொம்பள வேதாந்தி'யைப் போல, கலைஞரின் முன் கத்தியோடு குதித்திருக்கிறார், வாஸந்தி. இது மாமி யோட வெர்ஷன்.

நமக்கோ, வேதாந்தி என்கிறவன் இப்படித் திமிர்த்தனமாக, ''ஒரு மாநில முதல்வரின் தலையை வெட்டிக்கிட்டு வா''ன்னு சொன்னானேன்னு கோபமா வருது. ஆனால் இவுங்களுக்கு, 'ராமரை கருணாநிதி திட்டிட் டாரே'-ன்னு ஆத்திரமா வருது.

இருவரும் தங்களது கட்டுரைக ளில், 'பெருவாரியான இந்துக்களின் உணர்வை...' என்று திரும்ப திரும்ப 'செட்டு' சேர்க்கிறார்கள். நம்மதான் நாத்திகர்கள். ஆனால் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் நாத்திகர் கள் இல்லை. அதில் பெரும்பான்மை யானவர்கள் இந்துக்கள். அவர்களுக்கு ராமனைப் பற்றிச் சொன்னால் கோபம் வருவதில்லை. கலைஞரைப் பற்றி சொன்னால்தான் கோபம் வருகிறது. ஏனென்றால், 'ராமன் வழிபாடு' என் பது தமிழ்நாட்டில் கிடையாது. அத னால்தான் தமிழ்நாட்டில் ராமனுக்கு குறிப்பிடும்படியாக கோயில் கூட இல்லை. (தமிழ்நாட்டில் ராமனுக்கு ஆதரவாக ஒரு பத்து பேர் இருப்பாங்க. அதுல இரண்டு பேர் இவுங்க)

மாலன் எழுதுறாரு, ''பாம்பன் நீரி ணையில் நடந்து வரும் அகழ்வு, நம் அரசியல் தலைவர்களின் அடிமனதில் உள்ள அச்சங்களையும் ஆசைகளை யும் காழ்ப்புகளையும் கூட வெளிக் கொணர்ந்து விட்டது'' அதையே நாம் இப்படி எழுதுவோம், ''கலைஞரின் ராமன் பற்றிய பேச்சுக்கு பிறகு, நடு நிலையாளர்களாக, மத நல்லிணக்கவா தியாக, சிறுபான்மையினரின் ஆதர வாளராக வேஷம் போட்டுக் கொண்டி ருந்த, பார்ப்பன பயங்கரவாதிகள் தங் களது உண்மை முகத்தைக் காட்டியிருக் கிறார்கள்.''

அதற்கு ஒரு எடுத்துக்காட்டை 'மாமியின் வெர்ஷனில்' இருந்து பார்ப் போம். ''அரசியலில் பதவியும் புகழும் கீர்த்தியும் செல்வாக்கும் இருக்கும் வரை எந்தக் கொம்பனும், கோடிக் கணக்கான இந்துக்கள் வழிபடும் சாட் சாத் ராமன் உள்பட, நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது என்ற எண்ணம் ஒரு மூத்த அரசியல் தலைவருக்கு வந்துவிட்டால், அது உச்ச நீதிமன்றம் வரை போய்விடும்.

''ராமர் பாலத்தை இடிக்காமல் திட் டத்தை நிறைவேற்ற மாற்று வழிகளை மூன்று மாத தவணைக்குள் ஆராய்வ தாக உச்ச நீதிமன்றத்தில் சொன்னது காங்கிரஸ் அரசு. கருணாநிதி இதை சற் றும் எதிர்பார்த்து இருக்க மாட்டார். எந்த காவியத் தலைவனை திராவிட இயக்கம் சளைக்காமல் இடித்து வந் ததோ, அதே ராமனின் பெயரில் அவ ரது கனவுத் திட்டம் அடிவாங்கி விடும் என்ற சாத்தியம் அவமானகரமானது. அவரது நாடு தழுவிய கீர்த்திக்கும், அர சியல் சக்திக்கும் வயதுக்கும் தோல்வி யையும் அவமானத்தையும் தாங்க வேண்டிய அவசியம் இல்லை. தாம் போட்ட கணக்கு தப்பிவிட்டது என்ற ஆத்திரத்தை அடக்க வேண்டும் என்ற பக்குவம் அரசியலில் பழம் தின்று

> ''கலைஞரின் ராமன் பற்றிய பேச்சுக்கு பிறகு, நடு நிலையாளர்களாக, மத நல்லிணக்க வாதியாக, சிறுபான்மையினரின் ஆதரவாளராக வேஷம் போட்டுக் கொண்டிருந்த, பார்ப்பன பயங்கரவாதிகள் தங்களது உண்மை முகத்தைக் காட்டியிருக்கிறார்கள்.''

கொட்டையை உமிழ்ந்துவிட்ட கருணா நிதிக்கு அவசியம் என்று பட வில்லை.''... ''எத்தனை வயதானா லும், எத்தனை செல்வாக்கிருந்தாலும் நா காப்பது நல்லது. இல்லையென் றால், வயதானதற்கும் பெற்ற அனுப வங்களுக்கும் அர்த்தமில்லை.''

இந்த வரிகளில், முதல்வர் மீது 'வேதாந்தி'க்கு இருந்த அதே ஆத்திரம், 'வாஸந்தி'யிடமும் வெளிப்படுகிறது.

''நா காப்பது நல்லது. இல்லை யென்றால்....'' இந்த வார்த்தைகளுக் குப் பின்னால் இருக்கிற உளவியல், 'கலைஞர் மீது வன்முறையை பிரயோ கிக்க வேண்டும்' என்கிற எண்ணத்தை யும், 'ஜென்ம விரோத'த்தையும் வெளிப்படுத்துகிறது.

'நடுநிலை' மாலனோ, இல. கணே சன் பாணியில், ''ராமர் எந்தப் பொறியி யல் கல்லூரியில் படித்தார்? வரலாற்று ஆதாரம் உண்டா? மது அருந்துபவர், மாமிசம் உண்பவர் என்பது போன்ற கேலிகளும், விவாதத்திற்கு தயாரா? என்ற சவால்களும் அவரது ஆரம்ப திராவிட கழக நாட்களை நினைவூட்டு கின்றன. ஆனால், இதை அவர் முதல் வர் நாற்காலியில் அமர்ந்து கொண்டு பேசுவதுதான் பொருத்தமானதாக இல்லை'' என்கிறார்.

நரேந்திர மோடி என்கிற ஒருவன் முதல்வர் நாற்காலியில் அமர்ந்து கொண்டல்ல, படுத்துக் கொண்டு, திட் டமிட்டு இஸ்லாமிய மக்களைக் கொலை செய்கிறான். அதைக் கேட்ப தற்கு வக்கற்றவர்கள், அல்லது அந்தக் கொலைகளை விரும்புகிறவர்கள், ஜன நாயக ரீதியாக ஒருவர் கருத்துச் சொல் வதைக் கண்டிக்கிறார்கள். ('சுப்ரீம் கோர்ட்டு'க்கு 'ஜட்ஜா' போறதுக்கான முழுத் தகுதியும் உள்ளவர்கள்)

கம்யூனிசத்திற்கு நேரெதிர் கருத்து கொண்ட பிற்போக்காளர்களும், கம்யூ னிச விரோதிகளும் தங்களது மோசடிக் கருத்தை நியாயப்படுத்த முயற்சிக்கும் போது மட்டும் மார்க்சை 'வெறும் மேற் கோளாக'ப் பயன்படுத்துகிற மோசடி வேலையைச் செய்வார்கள். அப்படித் தான் இந்த 'மோசடி மாலனும்' மார்க்சை மேற்கோள் காட்டுகிறார்.

''மதம் ஒரு அபின் என்ற கருத் துக்கு நம்மை இட்டுச் செல்லும் முன், அதை விளக்கும் முகமாக, மதம் என் பது ஒடுக்கப்பட்ட ஜந்துக்களின் பெரு மூச்சு, இதயம் இல்லாத உலகின் இத யம் என்று சொல்கிறார் மார்க்ஸ்'' என்று தன் நோக்கத்துக்கு ஏற்ப மார்க்சைப் பிரித்து, திரிக்கிறார்.

சரியாக 150 ஆண்டுகளுக்கு முன், 1848-இல் 'மார்க்ஸ் - எங்கெல்ஸால்' எழுதப்பட்ட 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' இப்படித் துவங்குகிறது. ''ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம் — கம்யூனிசம் என்னும் பூதம். போப் பாண்டவரும் ஜாரரசனும், மெட்டர் னிக்கும் கிசோவும், பிரெஞ்சுத் தீவிர வாதிகளும் ஜெர்மன் உளவாளிக ளுமாய், பழைய ஐரோப்பாவின் சக்தி கள் அனைத்தும் இந்தப் பூதத்தை ஓட்டு வதற்காகப் புனிதக் கூட்டு சேர்ந்திருக் கின்றன.''

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வதை 'கடவுள்' என்று சொல்வது தான் உலக வழக்கம். ஆனால், இவர் களோ கம்யூனிசத்தை 'பூதம்' என்கிறார் கள். 'கடவுள்' என்ற வார்த்தையை

www.padippakam.com

**இந்த வரிகளில், முதல்வர் மீது 'வேதாந்தி'க்கு இருந்த அதே ஆத்திரம், 'வாஸந்தி'யிடமும் வெளிப்படுகிறது.**

**''நா காப்பது நல்லது. இல்லையென்றால்....''**

அவர்கள் பயன்படுத்தவில்லை. கம்யூனிசத்துக்கு எதிராக அணி சேர்ந்து இருப்பவர்கள்தான் கடவுள் ஆதரவாளர்கள், போப்பாண்டவர்கள் போன்ற மதவாதிகள். அதனால்தான் அதைப் 'புனிதக் கூட்டு' என்ற வார்த்தையால் அடையாளப் படுத்துகிறார்கள். 'பூதம்' என்ற வார்த்தையை கடவுளுக்கு எதிரான, ஆதிக்கத்திற்கு எதிரான சொல்லாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ஒருவேளை, மாலன் இன்னொரு நாள் கம்யூனிசத்துக்கு எதிராகக் கருத்துச் சொல்லும்போது, 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையிலேயே, கம்யூனிசத்தை மார்க்சும், எங்கெல்சும் 'பூதம்' என்று சொல்லியிருக்கிறார்கள், என்பது கவனிக்கத் தக்கது' என்று சொல்லுவார் போலும்.

''எதையும் வரலாற்றின் வெளிச்சத்தில் உறுதிப்படுத்திக் கொள்வது என்பது ஒரு வகையில் மேற்குலகிலிருந்து நாம் கற்றுக் கொண்ட வழக்கம். கீழ்த்திசை நாடுகளில் வாழ்வை வரலாற்றை விட இலக்கியத்தில் பதிவு செய்வது, என்பதே வழக்கமாக இருந்திருக்கிறது என்பதையும், இலக்கியம் என்பது மக்களைப் பற்றியதாகவும், வாழ்க்கையைப் பற்றியதாகவும் இருந்திருக்கிறது என்பதையும், இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்'' என்கிறார் மாலன்.

வரலாற்றை இருட்டடிப்புச் செய்து அல்லது இலக்கியத்தையே வரலாறாகச்சித்தரித்ததில் எவ்வளவு மோசடிகள் நியாயப் படுத்தப்பட்டிருக்கின்றன! சம்பூகனைக் கொன்ற 'கொலைகார' ராமனை 'கதாநாயக'னாக நியாயப் படுத்துகிறதே, அது எது? இலக்கியமா? வரலாறா? ஆயிரக்கணக்கான சமணர்களைக் கொன்ற பிறகும், 'அன்பே சிவ'மாகக் காட்சி தருகிறார்களே, 'சைவக் களவாணிகள்' அது எதனால்? வரலாற்றினாலா? இலக்கியத்தினாலா?


தாழ்த்தப்பட்டவர் என்பதினாலேயே 'நந்தனை' தீயிட்டுக் கொளுத்தி, அந்தக் கொலையை 'புனித'ப் படுத்தினார்களே, பார்ப்பனர்கள், அது வரலாறா, இலக்கியமா?

இலக்கியம் முழுவதும் பார்ப்பன நலன், பார்ப்பன உயர்வு, உழைக்கும் மக்களுக்கு எதிரான கருத்துக்களாகவே நிரம்பியிருக்கிற ஒரு நாட்டில், 'வரலாற்றை விடவும், இலக்கியம் முதன்மையானது' என்று ஒருவன் சொன்னால், அவன் எப்பேற்பட்ட 'ஃபிராடாக' இருப்பான்.

''இராமாயணத்தில் தண்டிக்கப்பட்டவர்கள் மூவர். வாலி, சூர்ப்பனகை, இராவணன் மூவரும் அடுத்தவர் மனைவிக்கு அல்லது கணவனுக்கு ஆசைப்பட்டவர்கள்'' என்கிறார் இந்த 'உத்தம புருஷன்' மாலன். உன் ராமன் சம்பூகனைக் கொன்றானே, சம்பூகன் என்ன உன் பொண்டாட்டி கையைப் பிடிச்சா இழுத்தான்?

•••

''ஒரே சொல், ஒரே கணை, ஒரே மனைவி என்று ராமனை வர்ணிக்கும் தியாகராஜரின் கீர்த்தனை ஒன்று உண்டு'' என்று மாலன் தன் கட்டுரையைத் துவக்குகிறார். அதேபோல மாமியும், ''திருவையாறு போயிருக்கிறீர்களா? தியாகராஜரின் கீர்த்தனைகளைக் கேட்டிருக்கிறீர்களா? அவரது



தெலுங்குப் பாடல்களையும் கேட்டு நெக்குருகி நிற்கும் சாமான்ய தமிழர்களைப் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கலைஞரை கேட்கிறார். ('சாமான்ய தமிழர்கள்' வார்த்தைக் கவனிக்கவும்)

நாமும் அதே தியாகராஜரின் கீர்த்தனை ஒன்றைச் சொல்லி, ராமனின் பெருமையை உலகுக்கு அறிவிப்போம். வனவாசம் புறப்பட்ட ராமன், தன்னுடன் சீதையைக் காட்டிற்கு அழைத்துச் செல்ல விருப்பம் இல்லாமல் சீதையை அயோத்தியிலேயே இருக்கும்படி சொன்னதற்கு, சீதை மொழிந்த மறுமொழி:

''ராமா உன்னிடத்தில் அழகு மாத்திரமே இருக்கிறது. அதைக் கண்டு அனைவரும் மயங்கி விடுகிறார்கள். உனக்கு ஆண்மை என்பது சிறிதும் இல்லை. என் ஒருத்தியைக் காக்க முடியாமல் நிறுத்தி நீ காட்டுக்குப் போனாய் என்று எனது தந்தையார் கேள்விப்படின், ''ஹா புருஷ வேஷத்துடன் வந்த ஒரு பெண்பிள்ளை (பேடி)க்கா என் புதல்வியைக் கொடுத்தேன்'' என்று தம்மை நொந்து கொள்வார்.

இம்மடவுலகர், ராமனிடம் சூர்யனைப் போன்ற தேஜஸ் ஜொலிக்கின்றது என்று கூறுகின்றனர். இது முழுப் பொய்யான வார்த்தை. மனைவியைப் பிறர்க்கு ஒப்படைத்துப் பிழைக்கும் தன்மையான கூத்தாடியைப் போல நீயாகவே என்னைப் பிறர்க்குக் கொடுக்க விரும்புகின்றனை'' (அயோத்தியா காண்டம், 30-வது சர்க்கம்; 229-வது பக்கம், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் மொழி பெயர்ப்பு)

திருமதி. சீதை தன் கனவன் ராமனை இப்படிக் கேவலமாகப் பேசிய 'இந்த சிச்சுவேஷனுக்குப் பொருத்தமாக' ஒரு பாடல் போட வேண்டும் என்றால், தியாகய்யர் ராமனை நினைத்துப் பாடிய ''எந்துகோ ராமா... ஈ ஜென்மமு...'' என்கிற கீர்த்தனையைப் போட்டு, அதனை இப்படிப் புரிந்து கொள்ளலாம்.

''உனக்கு எதுக்கு ராமா இந்த ஜென்மம்?''

மாலனும், வாஸந்தியும் ஏதோ கலைஞர் ராமனைப் பற்றி தன் சொந்தக் கருத்தைத் தெரிவித்ததைப் போல கோபப்படுகிறார்கள். ஆனால், அவர் வால்மீகி ராமாயணத்தில் இருந்துதான் மேற்கோள் காட்டினார். இவர்களுக்கு குறைந்தபட்ச அறிவு நாணயம் இருந்தால், வால்மீகி ராமாயணத்தில் சொல்


படிப்பகம்

www.padippakam.com

லப்பட்டிருக்கிற 'மேற்படி' செய்திக ளுக்கு முறையான விளக்கம் சொல்லி விட்டு, பிறகு பகுத்தறிவாளர்கள் மீது பாயட்டும்.

''கருணாநிதிக்கு நம்பிக்கை இல்லை என்பதும் நாத்திகவாதி என்ப தும் அவரது சொந்த விஷயம்.'' ''கண் ணாடி அறைக்குள் அமர்ந்து கல்லெறி யக் கூடாது. அதுவும் எப்படிப்பட்ட கல்? ஒரே வீச்சில் இந்தியா மொத்தத்தி லும் உள்ள பெரும்பான்மையான இந் துக்களைப் புண்படுத்தும் ஆயுதமாக'' என்று சீறுகிறார் வாஸந்தி.

ஒரு காலத்தில், கணவன் இறந்த போது மனைவியை உடன் வைத்துக் கொளுத்திய அநீதியைக் கண்டித்து, சமூக அக்கறை உள்ளவர்கள் எழுந்த போது, இதேபோலத்தான் மதவாதிகள் கோபப்பட்டார்கள். வாஸந்தி கோபப் படாத பார்த்தா, 'உடன் கட்டையை' தடைசெய்தது கூட இந்துக்களைப் புண் படுத்தும் செயலாகத்தான் தெரிகிறது. 'உடன் கட்டை' வழக்கம் தொடர்ந்து இருந்திருந்தால், வாஸந்தியிடம் இருந்து இப்படி ஒரு கட்டுரையும் வந்தி ருக்காது; அதுக்கு பதில் எழுதுற வேலை யும் நமக்கு மிச்சமாகி இருக்கும்.

•••


''இந்து மதம் பல ஆயிரம் ஆண் டுகளாக இந்திய மக்களின் உணர்வுக ளில் கலந்தது. அதை எந்த எதிர்ப்புகளி னாலும் அழிக்க முடியாது. அதற்கு ஒரு பாரம்பரியம் உண்டு'' என்பதே பார்ப் பன அறிவுஜீவிகளின் ஆவேசம்.

10.1.1947-இல் விடுதலை தலை யங்கத்தில் தந்தை பெரியார் இப்படி எழுதினார்:

''யார் என்ன சொன்னாலும், ஆயி ரக்கணக்கான ஆண்டுகளாய் உள்ள இந்து மதத்தை அசைக்க எவராலும் முடியாது. எத்தனையோ எதிர்ப்புக ளையும், கஷ்டங்களையும் சமாளித்துக் கொண்டு உயிரோடிருக்கிறது இந்து மதம்'' என்று சர். இராதாகிருஷ்ணன் போன்ற மேதைகள் கூறலாம். உயி ரோடு இருப்பதினால் மட்டுமே ஒரு விஷயம் உயர்வானதாகி விடுமா?

எவ்வளவோ எதிர்ப்புக்களுக்கி டையே எலி, கொசு, தேள், பாம்பு, மூட் டைப்பூச்சிகள் கூடத்தான் உயிரோடு இருக்கின்றன. இவைகளெல்லாம் இந்துமதத்தை விட புனிதமான வைகளா? அதிகப் பலன் தரக்கூடிய வையா?''

● வே. மதிமாறன்





படிப்பகம்

# வேசி-... அறம்... அனுபவம்.

அப்போது நான் கோவையில் சர்வீஸ் என்ஜினியராகக் குப்பை கொட்டிக் கொண்டிருந்த காலம். சாயங்காலம் எல்லா கால்சும் முடித்து விட்டு, இரவு பத்து மணிக்குத்தான் வீட்டுக்கு கிளம்புவேன். அப்படியே பைக்க ஓட்டிட்டு காந்திபுரம் போய், ஒரு பாதாம் பால் அடிக்கிறது வழக்கமாகி விட்டது.

அது ஒரு தகரப் பெட்டிக்கடை. வெளியில் நின்றுதான் பாதாம் பால் குடிக்க வேண்டும். முதல் நாளே அவளைக் கவனித்தேன். கடையை விடத் தள்ளி கொஞ்சம் உள்ளடங்கி இருக்கும் வெளிச்சம் குறைந்த பகுதியில் நின்றிருந்தாள். அந்த சூழ்நிலைக்கு கொஞ்சம்கூட பொருந்தாமல் தெரிந்தாள். நடுத்தர வயதிலும் பலமான மேக்கப். வழக்கு மொழியில் சொன்னால் செமகட்டை. நான் பார்ப்பது தெரிந்ததும் என்னைப் பார்த்து சிரித்தாள். எனது ஆறாவது அறிவுக்கு உடனடியாகப் புரிந்தது.

''டே ராசப்பா..... எஸ்கேஏஏஏப்..'' அவசரமாக பத்து ரூபாயைக் கொடுத்து விட்டு பைக்கை உதைத்தேன். அன்று இரவு என் கனவில் மேக்கப் சுந்தரி சிரித்து விட்டுச் சென்றாள்.

மறுநாள் மாலை ஆக ஆக ஒரு வேலையும் சரியாக ஓடவே இல்லை. ஒரே பரபரப்பாக இருந்தது. பாதாம் பால் வேறு நல்ல சுவையாக இருந்து தொலைத்தது. ''என்னடா! பத்து நாள் கக்கூஸு போகாதவன் மாறி மூஞ்சிய வச்சுட்டு திரியுற?'' நண்பன் வேறு நக்கலடித்தான். எனது குறுகுறுப்பு அதிகரித்தது. எனக்கு நானே சொல்லிக் கொண்டேன் ''டே ராசப்பா! இது உனக்கு ஒரு சவால்டா. உன்னோட ஒழுக்கத்தோட பலம் இவ்வளவுதானா? இன்னிக்கு பால் சாப்பிட போற, ஆனா திரும்ப அதை பாக்க மாட்ட...ஓகே?''

சரியாக 9.59-க்கே பாதாம் பால் கடைக்கு ஆஜர். முதலில் எதிர்ப்புறமாகத் திரும்பி நின்று கொண்டே குடித்தேன். 'சனி'தான் நம்ம மச்சானாச்சே! சாதாரணமாகத் திரும்புவது போல திரும்பினேன்.

அவள் எதிர்பார்த்திருந்தாள் ... ! அதே கூப்பிடும் சிரிப்பு. என் உள்காயத்தை மறைத்துக்கொண்டே ''சே! இதுக்கு பிச்சை எடுக்கலாம்..'' என்று சத்தமாகச் சொன்னேன். சட்டென்று அவள் முகம் சுருங்கியது, எனக்கு திருப்தியாக இருந்தது. கடைக்காரனுக்கு பணத்தைக் கடாசி விட்டு, பைக்கை கதறவிட்டு கிளம்பினேன். அவளை முறைத்துக் கொண்டே கடந்து சென்றேன்.

ஆயிற்று, இப்படியாக ஒரு வாரம் கடந்தது. ஒரு நாள் இரவு அதே பால்கடை. கொஞ்ச தூரத்தில் அதே அவள். இப்போதெல்லாம் அவள் என்னை பார்ப்பதில்லை. அதான் யோக்கியன் வேஷம் போட்டாச்சே! அந்த நேரத்தில் ஒரு சாராய பார்ட்டி என்னைக் கடந்து சென்றது. பாடிக் கொண்டே அவளைப் பார்த்ததும் நின்றது. ஒரு மாதிரியாக இளித்தபடியே ''யேய் வாடி'' என்றது. ''முன்னூறு'' உணர்ச்சியே இல்லாமல் காய்கறி விலை சொல்வது போல் சொன்னாள். எனக்கு சுவாரசியமானது. இவள்தான் நான் கண்ணால் பார்த்த முதல் விபச்சாரி. இதுவே நான் காதில் கேட்ட முதல் பேரம். இருக்காதா பின்னே?

''ஹா... தாரன்! வாடி மொதல்ல''

''இங்கியே குடு''

''ஓ! தர்லன்னா வரமாட்டியா? வாடின்னா..'' சொன்னபடியே கையைப் பிடித்து இழுத்தது சாராயக்கடை.

''கட்டித்தீனி! உட்றா கையை'' சீறினாள் அந்தப் பெண்.

சாராயம் சூடேறி விட்டான். ஒன்றும் பேசாமல் ஓங்கி ஒரு அறை விட்டான். சாலையில் யாரும் இல்லை. நானும், பாதாம்பால் கடைக்காரனும்தான் இருந்தோம். கடைக்காரன் முகத்தில் ஒரு மாற்றமும் காட்டாமல், 'தம்ளர் கழுவுவதே வாழ்க்கை இலட்சியம்' போல கழுவிக்கொண்டிருந்தான். இதற்குள் நாலைந்து அடி விழுந்து விட்டது. உதடு கிழிந்து ரத்தம் வேறு கொட்ட ஆரம்பித்தது. சேலை முந்தானையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்து விட்டான்.


எனக்கு பொறுக்க முடியவில்லை, சாராயம் வேறு சோதாவாகத் தெரிந்தானா, இவன்கிட்ட காட்டாம வேற எவன்கிட்ட காட்டுவதாம், என் வீரத்தை! விடுவிடுவென்று சென்றேன்.

''டேய் மயிரு... கைய எடுறா. நான் முன்னாடியே காசு குடுத்துருக்கேன். நீ மூடிட்டு போயிரு. இல்ல மூஞ்சிய பேத்துருவேன்'' எனக்கே எனது குரல் சத்தமாகக் கேட்டது. சாராயம் இதை எதிர்பார்க்கவில்லை. என்னை அண்ணாந்து பார்த்தான். நான் அவனை விட அரை அடி உயரம். சப்த நாடியையும் ஒடுக்கிக் கொண்டு தள்ளாடியபடியே நகர்ந்து விட்டான்.

நான் எதுவும் பேசாமல் அவளைப் பார்த்தேன். மேக்கப் முழுவதும் கலைந்து உதட்டில் ரத்தம் வழிய கோரமாய் இருந்தாள். ''ரொம்ப தேங்க்ஸு தம்பி'' என்றாள். கண்ணில் நீர். அவள் 'தம்பி' என்று விளித்தவுடன் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. சமாளித்துக்கொண்டே ''பரவாயில்லைங்க. பாருங்க இந்த மாறி வேலை செய்யறதுனாலதான் இப்படியெல்லாம் நடக்குது?'' அட்வைசுத்

**''என்ன வாழ்க்கை! கண்டவன்கிட்ட அடி வாங்கி, உதை வாங்கி, நூறோ எரநூறோ சம்பாதிக்க கண்டவனோட படுத்து, நோயோட வாழ்ந்து நோய பரப்பி, சாகும்போது பக்கத்துல யாரும் இல்லாம தனியா செத்து..''**

www.padippakam.com



தண்ணியை அள்ளிவிட இதை விடவா நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும். பின்னே நாமெல்லாம் எப்ப காந்தி தாத்தா ஆகறது?

ஆனால் என் அட்வைசை அவள் லட்சியம் செய்யவில்லை. "தேங்ஸு தம்பி" என்று என்னிடம் சொன்ன படியே ரோட்டில் ஓடிய ஒரு ஆட்டோவை அழைத்தாள். என்னைத் திரும்பிப் பார்த்தபடியே சென்று ஏறிக் கொண்டாள். ஆட்டோ ஒரு நிமிடம் போகாமல் நின்றான். நானும் வருவேன் என்று எதிர்பார்த்தான் போல. அவள் போகச்சொன்ன பின்னரே ஆட்டோவைக் கிளப் பினான்.

அன்றிரவு என் காதுகளில் 'தம்பி' என்ற வார்த்தை ஒலித்துக் கொண்டே இருந்தது. தூக்கம் கோவிந்தா. அதிகாலை மூன்று மணிக்கு முடிவு செய்தேன் "இன்றிலிருந்து பாதாம் பால் விஷப்பரிச்சை - ஓவர்".

ஒரு மாதம் இப்படியே ஓடி விட்டது. ஒருநாள் மாலை தற்செயலாக பழைய மேம்பாலம் அருகே வண் டியில் சென்று கொண்டிருக்கும் போது அவளைக் கவனித்தேன். மேம்பா லத்தின் கீழ் இருந்து வேக வேகமாக ஓடி வந்தாள். அதே அவள். கடைசி யாகப் பார்த்த அதே கோலம். மேக்கப் கலைந்து கன்னம் வீங்கி அலங்கோ லமாய் இருந்தவள், கையை வீசி வண்டியை நிறுத்தினாள். மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கினாள். கொஞ்சம் தொலைவில் பேண்ட்டை இடுப்புக்கு இழுத்தபடியே ஒரு காண்டாமிருகம் ஓடி வந்து கொண்டிருந்தது. அந்த உருவமே எனக்கு பயத்தை உண்டாக் கியது. ஆனாலும் மறைத்துக் கொண்டே வண்டியில் இருந்து இறங்கப் பார்த்தேன். அதான் ஒரு முறை ஒரு சோதாவிடம் ஹீரோ ஆகித் தொலைத்து விட்டிருந்தேன். இப்போது பின்வாங்கவா முடியும்?

"தம்பி வேண்டாம்பா அது போலீஸு, நீ வண்டிய எடு."

நல்லவேளை முதலிலேயே சொல்லி காப்பாற்றினாள். கியரை மாற்றி வண்டியைக் கிளப்பினேன். பின்னால் தொத்திக் கொண்டாள். நன்றாக இடைவெளி விட்டு உட் கார்ந்து கொண்டாள். அது எனக்கு ஏமாற்றமாக இருந்தது!

'எங்கீங்க?'

'புதூரு'

வேறு பேச்சே இல்லை. புதூர் வந் ததும் நாலைந்து சந்து பொந்துகளில் திருப்பச் சொன்னாள். ஒரு குடிசையின் முன் இறங்கிக்கொண்டாள். வண்டிச் சத்தம் கேட்டு ஒரு ஓமக்குச்சி வெளியே வந்தான். "சார் உள்ளாற வாங்க" குழைந்து கொண்டே கூப் பிட்டான். "யோவ் நா அதுக்கு வரல, அந்தம்மாவப் பாரு மூஞ்சி கிழிஞ்சி வந்துருக்காங்க" அவன் அவளுண்டைய காயத்தை லட்சியம் செய்யவில்லை. "என்னடி இன்னிக்கு கஸ்டமரு இல்லியா?"

"போலீஸு தொல்ல, வா அப் புறம் பேசிக்கலாம்" அவள் உள்ளே போக எத்தனித்தாள். அவன் இளித்த படியே என்னிடம் வந்தான். சுர்ரென்று வந்தது எனக்கு. "டேய்..." அதற்குள் அவள் குறுக்கிட்டாள். "தம்பி என்னிய இங்க உடத்தான் வந்திச்சு. நீங்க போங்க தம்பி. நீ உள்ளார வாய்யா"

புதூரிலிருந்து வீடு வரும் வரை ரத்தம் வழிந்த அவள் முகத்தை நினைத்துக் கொண்டே வந்தேன். "என்ன வாழ்க்கை! கண்டவன்கிட்ட அடி வாங்கி, உதை வாங்கி, நூறோ எரநூறோ சம்பாதிக்க கண்டவனோட படுத்து, நோயோட வாழ்ந்து



படிப்பகம்

www.padippakam.com

நோயோட செத்து, நோய பரப்பி, குடும்பமில்லாம சாக்காலத்துல கூட நிம்மதி இல்லாம செத்து. அப்படியும் சாகும்போது பக்கத்துல யாரும் இல்லாம தனியா செத்து..''

இரவு இரண்டு மணிக்கு அம்மா கேட்டாள், ''இன்னிக்கு எவன்கிட்டடா அடி வாங்கிட்டு வந்த, தூங்காம பொரண்டுட்டு இருக்க?'' என்னிடம் பதில் இல்லை.

இரண்டு நாள் போயிருக்கும். காலையில் வழக்கம் போல கால்ஸ் போகாமல் கட் அடித்து விட்டு ரயில் வேசுக்கு எதிரே உள்ள பேக்கரியில் உட்கார்ந்து டீ அடித்துக் கொண்டி ருந்தேன். ''தம்பி..'' நிமிர்ந்தேன். தையல் போட்ட உதட்டுடன் அவள். சுற்றுமுற்றும் பார்த்தேன். யாரும் தெரிந்தவர்கள் இல்லை.

**பாவ புண்ணியத்த புக்குல எளுதுனவன எங்க சேரில பத்து நாளு இருந்து பாக்கச் சொல்லு. திரும்பிவந்து கொல பண்றது கூட தப்பில் லைன்னு இன்னொரு புக்கு எளுதுவான். அப்ப நீங்கெல்லாம் கொல பண்ணக் கெளம்பீருவீங்களா?**

''நல்லாருக்கீங்களா?'' என்ன ஒரு கேள்வி!

''..ம்ம் இருக்கேன் தம்பி. நீங்க இங்க பக்கத்துல தான் வேலை செய்ய றீங்களா?''

''ஆமாங்க. அந்தாளு உங்க ஊட்டுக்காரருங்களா?''

''ம்''

''வேலைக்கெல்லாம் போறதில் லீங்களா?''

''கல்யாணத்துக்கு மின்னாடி போய்ட்டிருந்தாரு. இப்ப இல்ல.''

''உங்களுக்கு பசங்க புள்ளைங்க இருக்குதுங்களா?''

''ஒரு புள்ளயிருக்குது தம்பி.''

சப்ளையரிடம் அவளுக்கும் சேர்த்து டீ சொன்னேன்.

அவளிடம் கேட்டேன், ''ஏங்க! அவுசாரி வேல செய்யறீங்களே! கூச்சமாவே இல்லீங்களா? இதுக்கு ஏதாச்சும் கூலி வேலைக்கு போலாமே?''

''எந்தூர்ல தம்பி கூலி வேலைக்கு அம்பது ரூவாக்கு மேல தர்றாங்க? அதுல சோறு காச்சறதா? இல்ல எம் பொண்ண படிக்க வக்கிறதா? அவளுக்கு அந்த அம்பது ரூவாக் காசுல கல்யாணங்காச்சி நடத்தறதா?''

''அதுக்கு, ஊரக்கெடுத்து சம்பாரிச்ச காசுல திங்கறது தெரிஞ்சா அவளுக்கு குளுகுளுன்னு இருக்குங்களா?''

''யாரு தம்பி ஊரக்கெடுக்கறது. அது ஏற்கனவே கெட்டுதாங் கெடக்குது. எங்கிட்ட வர்றவனெல்லாம் நாங் கெடுத்துதான் எங்கிட்ட வர்றானா? மின்னாடியே கெட்டதனாலதான் எங்கிட்ட வர்றான். யோக்கியனுக்கு அவுசாரிகிட்ட என்ன வேல? மொதல்ல ஒன்னு தெரிஞ்சுக்க, காலையில பட்டையோட ஊட்டவுட்டு கெளம்பி, நாளெல்லாம் காந்தி வேசம் போட்டுட்டு சாயந்திரமா எம்மேல கைய வைக்கறவனயா, நீ யோக்கியனுங்குற? ஊட்டுல பொண்டாட்டிய வச்சுட்டு எங்கிட்ட வர்றவன், நானில்லீன்னா பக்கத்தூட்டுப் பொம்பளைய கைய புடுச்சு இளுப்பான். பக்கத்தூட்டுக்காரிக பாதுகாப்பா இருக்காளுகன்னா அதுக்கு நாந்தான் காரணமாக்கும்.''

''அவனுகள உடுங்க. நீங்க பண்றது பாவத்தொழில் இல்லீங்களா?''

''எது தம்பி பாவம்?''

''பல பேரோட படுக்குறது பாவமில்லீங்களா?''

''நீங்க மனசுக்குள்ளாற பண்றதெல்லாம் நா வெளியில பண்றேன். வேறென்ன தம்பி வித்தியாசம்?'' பல நாள்களுக்குப் பிறகு மீண்டும் செருப்படி. டீ வந்தது. டீயைக் குடித்துக் கொண்டே கேட்டேன்.

''அப்படீன்னா அவுசாரித்தனம் புண்ணியம்னு எந்த சாமி, எந்த புக்குல சொல்லுச்சுங்க?''

சிரித்துக் கொண்டே சொன்னாள், ''சாமி எந்தப் புக்கும் எளுதல தம்பி. எளுதுனதெல்லாம் எல்லா சவுரியமும் இருந்த உங்கள மாறி ஆளுங்கதான் தம்பி. பாவ புண்ணியத்த புக்குல எளுதுனவன எங்க சேரில பத்து நாளு இருந்து பாக்கச் சொல்லு. திரும்பி வந்து கொல பண்றது கூட தப்பில்லைன்னு இன்னொரு புக்கு எளுதுவான். அப்ப நீங்கெல்லாம் கொல பண்ணக் கெளம்பீருவீங்களா? உடுங்க தம்பி! அவிங்கவிங்க நாயம் அவிங்கவிங்களுக்கு. ஆனா ஒன்னு புரிஞ்சுக்கங்க. நீங்க பாக்காத கேக்காத வாழ்க்கைன்னு ஒன்னு இருக்கு. அதுல வாழற மனுசனுங்களும் உங்க ஒலகத்துலதான் இருக்காங்க. உங்களுக்கு தெரியாது புரியாதுங்கறதுக்காக அதெல்லாம் பொய்யின்னு ஆயிராது. ஒங்க நாயம், பாவம், புண்ணியம் இதெல்லாம்வுட வாழ்க்க பெரிசு தம்பி''

''நா.. வாரந் தம்பி'' என்றபடியே டீக்காசை அவளே கொடுத்து விட்டு எதிர்ப்புறம் நின்ற பேருந்தை நோக்கி வேகமாக சென்றே விட்டாள். மதியம் வரை அசையாமல் பேக்கரியிலேயே உட்கார்ந்திருந்தேன். ஆங்கில ஹிந்து மிஷனரி பள்ளியில் படித்து, வாரந் தோறும் பஜனை சொல்லி, கோக்-பெப்சி கலாச்சாரத்தில் வாழ்ந்து வந்த எனக்கு, வாழ்க்கை குறித்தும், பாவ புண்ணியம் பற்றியும் வேசி ஒருத்தி பாடம் நடத்திச் சென்றாள். உண்மைச்சூடு தந்த அதிர்ச்சியில் வெகு நேரம் உறைந்திருந்தேன்.

இப்போதெல்லாம் பாதாம் பால் சாப்பிடுவதில்லை. நீண்டநாள் கழித்து சாப்பிட வேண்டும் போல இருந்தது. பைக்கை காந்திபுரம் விட்டேன். அதே கடை.. ஆர்வமாய் இருட்டுப் பகுதியைப் பார்த்தேன். அவள் இருந்தாள். பாசாங்கில்லாமல் சிரித்தேன். அவளும் சிரித்தாள். அது அழைப்பின் சிரிப்பல்ல. நட்பின் சிரிப்பு. இன்றைக்கு பால் கூடுதல் சுவையாக இருந்தது.

காசைக் கொடுத்துவிட்டு வண்டியைக் கிளப்பினேன். கோவையின் மார்கழிக் குளிரில் உடல் நடுங்கியது. பனியடர்ந்த சாலையில் மெர்க்குரி வெளிச்சம் தெளிவைக் கொடுத்துக் கொண்டிருந்தது. தவறில்லாத ஏதோ ஒன்றைக் கற்றுக்கொண்டது போல மனம் நிறைவாக இருந்தது. அன்று கனவுகள் இல்லாமல் தூங்கினேன்.

● கார்க்கி



படிப்பகம்

www.padippakam.com

# தெகல்கா வாக்குமூலங்கள்: இந்து பாசிசத்தின் உளவியல்!

“உள்ளே ஒரு மிருகம் காத்திருக்கிறது; தூண்டி விட்டால் அது வெறியோடு கிளம்பும்”, என்பது ஒரு சௌகரியமான பொய். மிருகத்தன்மை மாறி பரிணாம வளர்ச்சியடைவதுதான் மனிதத்தன்மை. பரிணாமம் பின்னோக்கிப் போகாது. குஜராத்தில் நடந்த வெறியாட்டம், தற்செயலாக தட்டி எழுப்பப்பட்ட மிருககுணம் அல்ல. அது இயல்பாக மனிதனிடம் உள்ள குணநலன்களை மழுங்கடித்து, பல காலமாக அவனது மூளையில் பதிய வைக்கப்பட்ட பேதவெறி; தன்னை விடத் தாழ்ந்தவனின் தலை சற்றே கூட நிமிரக்கூடாது எனும் ஆதிக்க வெறி; யதேச்சையாய் வெடித்த கலவரமல்ல, அது ஒரு திட்டமிட்ட வேட்டை.

‘எதைச் செய்வது சரி, எப்படிச் செய்வது சரி’ என்பதெல்லாம், மனித மனம் நாளும் கற்றுத் தேர்பவை. மனவியல் கருத்தின்படி, ஊக்குவிக்கப்படுவன (மிட்டாயோ? கைதட்டலோ?) சரியானவை என்றும், தண்டிக்கப்படுவன (அடிக்கப்படுவதோ? ஒதுக்கப்படுவதோ?) தவறானவை என்றும், மனம் கற்றுக் கொள்கிறது. ‘தண்டிக்கப்படமாட்டோம், தப்பிப்போம்’ என்று மனதுக்குத் தெரிந்தால் — தவறானதாகத் தெரிந்து வைத்தவற்றைக் கூட முயன்று பார்க்கத் துணியும். தண்டனை கிடைக்காது எனும் தைரியமும், ஓர் ஊக்குவிப்புதான். இப்படி மிருகத்தனமான செயல்கள், நேரடியாகவோ? மறைமுகமாகவோ? ஊக்குவிக்கப்பட்டால், மனம் ‘இதுவே நியாயம்’ என்றும் நம்பியிருக்கும்.

சரியான காரியங்களைச் செய்த பின் இயல்பாகவே மனதுக்குள் மகிழ்ச்சியும், பெருமையும் நிலவும். ‘வெட்டினேன், கொளுத்தினேன், கொன்றேன், கொள்ளையடித்தேன், கற்பழித்தேன்’ என்று பெருமையோடு பேசும் குஜராத் இந்து மதவெறியர்களின் மனங்கள், ‘அந்தக் காரியங்கள் நியாயமானவை, அவசியமானவை, சரியானவை’ என்று தீர்மானித்து விட்டதால்தான், இத்தனை ஆண்டுகள் கழித்தும் தங்களது வெறிச் செயல்களை ‘வீர சாகசங்களாகவும், வெற்றிச் சரித்திரங்களாகவும்’ அவர்கள் கொக்கரிக்கிறார்கள். அவர்களின் மனங்களுக்கென்றே ஒரு ‘கோணலான கல்வி’ தொடர்ந்து பாடமாகப் பதியவைக்கப்பட்டுள்ளது.

‘திருடுவது, கொல்வது, கற்பழிப்பது போன்றவை சரி’யென்று, பொதுவாக எந்த மதத்திலும் கூறப்படுவதில்லை. ஆனாலும், அந்தக் கலவரமும், வெறியாட்டமும் மதத்தின் சார்பாகவே நடந்தது. ‘மிதமானவை, மூர்க்கக் கட்டமைப்பு இல்லாதவை’ என்று சொல்லிக் கொள்ளும் எல்லா மத மார்க்கங்களிலும் தாம் உயர்ந்தவர், கடவுளுக்கு அருகிலுள்ளவர் — தமது வழி வராதவரெல்லாம் தீயவர், தாழ்ந்தவர் என்ற மறைமுக போதனைகளும் உண்டு.

மேலோட்டமாகவேனும் நெறி புகட்டுவதாய் கருதப்படும் மதவரம்புகளை மீறி, அதைச் சார்ந்த ஒரு கூட்டம் வெறியாடுகிறது என்றால் — அந்தக் கும்பல் கயவர்களாலானது அல்லது அந்த மதநெறியே கோணலானது என்றே அர்த்தம். மேல் - கீழ் எனும் பேதவெறியை தொடர்போதையாக





படிப்பகம்

www.padippakam.com

**குஜராத்தில் அவர்களுக்கு சமூக அனுமதி, அரசியல் சலுகை, ஆசைகளுக்குத் தீனி, வெறிக்கு வடிகால், குற்றங்களுக்கு நியாயம் எல்லாமே கிடைக்கும் என்று தெரிந்த உடன், கோழைகளின் கூட்டம் 'வீரர்களின் சேனை'யாகத் தன்னை நினைத்துக் கொண்டது. வெறியாட்டத்தைப் 'போர்' என்றும், அரசு பலத்தை 'வீரமெ'ன்றும் கருதியவர்கள், பெருமையோடு இன்றும் திரிவது, அந்தச் சமூகம் தந்த அனுமதியோடுதான்.**

ஊட்டி விட்டால், 'தர்மம்' என்பதற்கே ஒரு புதிய அர்த்தம் தோன்ற ஆரம்பிக்கும்.

சமூக - சட்ட அங்கீகாரமற்ற கோரச் செயல்களில் இவர்கள் ஈடுபடுவதற்குக் காரணம், உள்ளே வேரூன்றிக் கிடக்கும் 'தான் உயர்ந்தவன்' எனும் ஆணவம். இந்தப் போலி சமூகச் செல்வாக்கு 'தன்னைவிடத் தாழ்ந்தவனை மிதிக்கலாம்' என்பதற்கு ஒரு அனுமதி போன்றே அவர்களது மனத்திற்குள் தோன்றும். இப்படியொரு கோணலான கண்ணோட்டத்தில் செய்த வன்முறை, வெறி, வரம்பு மீறல், கேவலம், கொடூரம் — எல்லாமே தக்க நேரத்தில் செய்த, சரியான காரியமாகவே அவர்களுக்குப் படும்.

அதனால்தான் அவர்களிடம் இது குறித்து வருத்தமும் இல்லை, வெட்கமும் இல்லை; குற்றமும் புரிந்து விட்டு, குறுகுறுப்பும் இல்லாதது மட்டுமல்ல, இவர்களிடம் சாதித்து விட்ட மமதையும் வெளிப்படுகிறது. இது வெறி மட்டுமல்ல, தண்டிக்கப் படாததால் வந்த தைரியம். கொலையும், கற்பழிப்பும், மனிதத்தன்மையே அல்ல என்பதை உணரக்கூட முடியாத அளவுக்கு உள்ளே மதவெறியும், ஆதிக்கத் திமிரும் வளர்ந்திருக்கிறது. இது ஆபத்தானது.

பொதுவாக, ஒரு போரின் முடிவில், வென்றவர்கள் தோற்றவர்களின் உடைமைகளை (பொருள்களை, பெண்களை) கொள்ளையடிப்பது, காலங்காலமாய் இருக்கும் ஒரு கோணலான நியதி. வெற்றி-பலம், தோல்வி-பலவீனம் என்று ஏற்றுக் கொள்ளப்படுவதால், 'பலவீனமான வர்களைக் கொள்ளையடிப்பதும், கொல்வதும், கற்பழிப்பதும், தவறு' என்பதற்குப் பதிலாக, 'யுத்த தர்மம்' என்றே இது போற்றப்பட்டு வந்துள்ளது. குஜராத்தில் நடந்தது யுத்தமா?

'எதிரிகள் மனிதர்களேயல்ல' என்ற மூர்க்க சித்தாந்தம்தான் ஒரு படையைத் தூண்டிவிட முடியும். குஜராத்தில் சேர்ந்தது ஒரு பரிதாபகரமான படை. இதுநாள்வரை, ஒதுக்கித் தாழ்த்தி வைக்கப்பட்ட ஒரு கூட்டம், சண்டைபோட மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 'தாங்கள் தாழ்வாகக் கருதப்பட்டவர்கள்', என்பதை மறந்து, 'தம்மிலும் தாழ்ந்தவனாக ஒரு எதிரியை அவர்கள் பார்த்தார்கள். இந்தப் போலி தர்மத்திற்கான யுத்த நேரத்தில் 'ஆதிக்கம் செலுத்தியவன் தன் தோளோடு தோள் நிற்கிறானே' என்ற பொய்யான மகிழ்ச்சி, கூட்ட மனப்பான்மையில் 'கொலை வெறி'யாகவும் மாறிவிட்டது. போர்ப் படை என்பதும் ஒரு கூட்டம்தான்.

எல்லாக் கூட்டங்களிலும், எப்போதுமே ஒரு தலைவன் உண்டு. அவனது ஆணைப்படியே அந்தந்த கூட்டம் இயங்கும். யதேச்சையாகத் திரளும் கூட்டங்களைத் தவிர, ஒரு இயக்கமாக, கட்சியாக, மதமாக அமையும் கூட்டங்கள், தலைவனை நேரில் பார்க்காத போதும் ஆணைகளைப் பின்பற்றும். இவ்வகைக் கூட்டங்களுக்கு 'தலைவன் சொல்வதே சரி, அவன் ஆணைப் படி நடப்பதே சரி' எனும் ஒரு மூர்க்கப் பின்பற்றுதல் சிந்தனை அமையும். இவ்வகைத் தலைவன், எதிரியை அடையாளம் காட்டித் தன் கூட்டத்தையே போரிட வைக்க முடியும்.

தான் அடையப் போகும் பெரிய லாபத்திற்காக, இந்தக் கூட்டத்திலுள்ள வேலைக்காரர்கள் அடையும் அற்ப சந்தோஷங்களை அவன் கண்டு கொள்ள மாட்டான். சில எலும்புத் துண்டுகளை, அவனது வெறிநாய்கள் தாங்களாகவே பொறுக்கிக் கொள்வதும், அவனுக்கு வசதியாகவே அமையும். போர் முடிந்து, வெற்றி கிடைத்த பிறகுதான் 'கூட்டத்துக்குத் தலைவன்' கொஞ்சம் தெரிவான். ஒன்றாக வெறியாடி, அவனுக்கு வெற்றி தேடித் தந்தவர்களில் சிலரே உயர்வார்கள். தற்காலிகக் கூலியாக மட்டுமே மற்றவர்கள் ஒதுக்கப்படுவார்கள். சாணக்கிய ரீதியில், இது 'ராஜநீதி' என்றும் கூட ஏற்கப்படும்.

இவ்வளவு யுத்த தந்திரங்களோடு செயல்பட்டு ஒடுக்குமளவு, குஜராத்தில் யார் எதிரி? அடிபட்டவன், என்ன தவறுகள் செய்தான்? இது பழிவாங்குதல் என்றால், பழிதான் என்ன? தொடர் தவறுகளின் ஆரம்பம் எது? மதவெறியே அடிப்படைக் காரணமென்றால், வெறியூட்டும் மதத்திலுள்ள தவறுகள் எவை? நேற்றுவரை தெருவில் சந்திக்கும்போது சிரித்துப் பழகிய பெண்ணை, இன்று துரத்திக் கற்பழிப்பதும், கொல்வதும் சாத்தியம் என்றால் - அவ்வெறியை ஊட்டியது யார்? ஊக்குவிப்பது யார்?

தொலைக்காட்சியிலும் பத்திரிக்கையிலும், இது குறித்து மேலோட்டமாகத் தெரிந்து கொண்டு, கொஞ்சமாக முகம் சுளித்து, மிகக் குறைந்த அளவில் வருத்தப்படும் நடுத்தர வர்க்கத்திற்கும், இதிலுள்ள வக்கிரமும் உக்கிரமும் புரியவே செய்கிறது. வழக்கமான கோழைத்தனம் வாயை மூடிவைத்தாலும், தேர்தலில் வரக்கூடிய தைரியம் என்ன ஆனது?


வெறிச் செயல்களுக்கு ஆதரவாக வாக்களிப்பதும், அச்செயல்களை ஊக்குவிப்பதேயாகும். நடுத்தர வர்க்கத்தின் இந்த மௌனமான மறைமுகமான ஊக்குவிப்பிற்குக் காரணம், சுயநலம் மிகுந்த அச்சம்; 'ஜெயிக்கும் குதிரை மேலேயே பணம் கட்டலாமே' எனும் சூதாட்ட மனப்பான்மை; வெல்பவன் பலசாலி – அவனை எதிர்ப்பதை விட கூட்டு சேர்ந்து கொள்ளலாமே, என்ற கோழைத்தனமான 'குயுக்தி'. இந்த நடுத்தர வர்க்கமும் ஒரு கூட்டம்தான்.

**வேடிக்கை பார்க்கும் நடுத்தர வர்க்கத்தின் மௌனமே, இந்தக் கூட்டத்தை இன்னும் உரக்கச் சப்தமிட வைக்கும்.... ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்கம், வெறியலையில் ஒருநாள் சுலபமாக உள்ளிழுக்கப்பட்டுவிடும்.**



படிப்பகம்

www.padippakam.com



மூர்க்க வெறியோடும் மூட பக்தி யோடும், ஒரு தவறான தலைவனைப் பின்பற்றும் கூட்டம், வாய்ப்பு கிடைக் கும் போதெல்லாம் வெறியாட்டம் போடும். வேடிக்கை பார்க்கும் நடுத்தர வர்க்கத்தின் மௌனமே, இந்தக் கூட் டத்தை இன்னும் உரக்கச் சப்தமிட வைக்கும். 'தன்னலக் குறிக்கோள்' மட் டுமே கொண்ட தலைவனிடம் அடி மைப்பட்டுக் கிடக்கும் இந்தக் கூட்டம், 'வெறியாடும் வாய்ப்பி'லேயே விடுத லையின் திருப்தியை அடையும். ஒரு முறை ருசித்த பிறகு, அடுத்த வெறி யாட்ட வாய்ப்புக்குக் காத்திருக்கும். இந்தக் கூட்டத்தை, ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்கம், வெறியலையில் ஒருநாள் சுல பமாக உள்ளிழுக்கப்பட்டுவிடும்.

தனி மனிதனுக்கு 'தன் வீடு, தன் இடம்' எனும் பாதுகாப்பான எல்லை கள் தேவைப்படுகின்றன. வெளியே ஒரு கூட்டத்துக்குள் நுழையும்போது, அவனுக்குத் 'தன் இடம்' என்பதில்லாத தால், ஒரு பாதுகாப்பின்மை உணர்வு ஏற்படுகிறது. இது ஒரு பயமாகவும் மாறுகிறது. இந்தப் பாதுகாப்பின்மை யின் பயத்தை, அவன் கூட்டத்தின் எண் ணிக்கையில் சரி செய்ய முயலுகிறான். தன்னைப் போலவே, பல தனிமனிதர் கள் இருக்கும் கூட்டத்தாலேயே தைரி யம் பெறுகிறான். கூட்டத்தின் அளவு அதிகரிக்கும்போது தனது தனித்தன் மையை மீறி, கூட்டத்தின் ஒட்டுமொத் தத் தன்மையில் கலக்கிறான். பெரும் பான்மை மக்கள் கூட்டத்தில் செம்மறி யாடுகள் போலிருந்தாலும், அதில் ஒரு கும்பல் தலைவனின் கூலிப்பட்டாள மாகச் செயல்படும்.

இந்தக் கும்பல்தான் கொள்ளைய டித்து, 'யுத்தம்' எனக் கூறி மற்றவர்க ளை இழுத்தும் செல்லும். எதிரியைத் தலைவனும், அவனுடைய கும்பலும் அடையாளம் காட்டும்போதே, கூட்டத் தில் 'கொல்லப்படுமுன் கொல்' எனும் ஆதி மனிதத் தற்காப்பு எண்ணம் ஊட் டப்படும். குஜராத்தில் எதிரிகளாகக் கூறப்பட்டவர்கள் கொல்ல வர வில்லை, பயந்தே ஓடினார்கள். கும்ப லோடு கூட்டம் அவர்களை வேட்டை யாடியது. சாதாரணக் கோழைகளுக்கு, 'கூட்டம்' ஊக்க மருந்தாக மட்டுமல்ல, பாதுகாப்புக் கவசமாகவும் மாறுகிறது.

கோழைகள் பயந்தவர்கள். 'தண்ட னையைத் தவிர்ப்பதே' அவர்களது அடிப்படை நோக்கம். ஆனால், கோழைகளுக்கு ஆசைகள் அதிகம். தண்டிக்கப்படாத வரை, எப்படியாவது ஆசைகளை அடையத் துடிப்பதே, அவர்களது சிந்தனைக்கோணம். நெறி களின் பால், சமூகத்தின் மேல் அக்கறை என்பதை விடவும், சமூகத்தின் அனும தியே அவர்களுக்கு முக்கியம்.

குஜராத்தில் அவர்களுக்கு சமூக அனுமதி, அரசியல் சலுகை, ஆசைக ளுக்குத் தீனி, வெறிக்கு வடிகால், குற் றங்களுக்கு நியாயம் எல்லாமே கிடைக்கும் என்று தெரிந்த உடன், கோழைகளின் கூட்டம் 'வீரர்களின் சேனை'யாகத் தன்னை நினைத்துக் கொண்டது. வெறியாட்டத்தைப் 'போர்' என்றும், அரசு பலத்தை 'வீர மெ'ன்றும் கருதியவர்கள், பெருமை யோடு இன்றும் திரிவது, அந்தச் சமூகம் தந்த அனுமதியோடுதான்.

அறிவும், பண்பும் இல்லாதது வீரமே அல்ல. மௌன கோழைத் தனம், இந்தப் போலி வீரத்தை மீண்டும் தூண்டும். முட்டாள்களும், கோழைக ளும் இருக்கும் வரை, ஆதிக்க வெறி யும், ஆணவமும் மிகுந்த அயோக்கி யன் தலைவனாகவே தொடர்வான். வெறியூட்டினால், தனக்கே இறுதி வெற்றி, என்ற இறுமாப்பில், அவன் மேலும் பல திசைகளில், தன் பார்வை யைத் திருப்புவான்.

போதையால் ஊட்டப்படும் வெறி, வெட்கப்படக்கூடிய அறிவை மழுங்க டிக்கும். சுயநலக் கோழைகள் மிகுந்த சமுதாயமும், அதைச் சுலபமாய் ஆட்டி வைக்கும் மோசடித் தலைமையும் 'தொற்று நோய்' போல நாடு முழுவதும் பரவும். அந்த ஆதாரக் கிரு மியை அழித்தால்தான் வருங்காலத்திற் குப் பாதுகாப்பு –இது அவசியமானது மட்டுமல்ல, அவசரமாகவும் செய்ய வேண்டிய காரியம்.

● ருத்ரன்,
மனநல மருத்துவர்.



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

உள்ள பெரும்பான்மை உழைக்கும் மக்கள் எம் கருத்தை ஏற்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. காரணம் மத நம்பிக்கையைக் காட்டிலும் வர்க்க இருப்பு யதார்த்தமானது, உண்மை யானது.

பொதுவில் கம்யூனிஸ்டுகள், உழைக்கும் மக்களின் மத உணர்வை புண்படுத்துவதில்லை. அதேசமயம் அவ்வுணர்வு அம்மக்களை ஒடுக்கும் நோக்கில் திட்டமிட்டே பயன்படுத்தப் பட்டால், அப்படிப் புண்படுத்துவதை எமது கடமையாகவே செய்வோம். ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய இசுலாம் 21-ஆம் நூற்றாண்டு சமூகத்தின் பிரச்சினையை எப்படித் தீர்க்க முடியும்? என்ற தசுலிமாவின் கேள்வி நியாயமானதுதானே?

அன்று அரேபிய பாலைவனத்தில் காட்டுமிராண்டிகளைப் போல நாடோ



ஹைதராபாத் தாக்குதல், இசுலாத்தின் ஆணாதிக்கத் திமிர்.

டிகளாய் அலைந்து கொண்டிருந்த பதூயின் இனக்குழு மக்களை நெறிப்படுத்திய மிகச்சிறந்த மனிதர் முகமது நபி. இத்தகைய சிறப்பை நாம் இயேசுவுக்கும், புத்தருக்கும் கூட அளிக்க முடியும். என்றாலும், இம்மதச் சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கைப்பணி அக்காலகட்டத்தோடு முடிந்து விட்டது. 'நவீன வாழ்க்கை தோற்றுவித்திருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் அது' என்று கருதிப் புதை பொருள் ஆராய்ச்சி செய்வது சிறுபிள்ளைத் தனம். மதத்தின் பெயரால், ஆதிக்க மனப்பான்மையுடன் சிந்திக்கப் பழகியிருக்கும் மதவாதிகள் அதைத் தெரிந்தே செய்கிறார்கள். 'உலகில் ஒரே ஒரு கிறிஸ்தவர் இருந்தார், அவரும் மரித்துப் போனார்' என்ற வழக்குத் தொடர் எல்லா மதங்களின் மூலவர்களுக்கும் பொருந்தும்.

ஆப்கான், ஈராக்கில் அப்பாவி மக்களை கொலை செய்யும் அமெரிக்க அதிபர் அதை கிறித்துவத்தின் பெயரால் நியாயப்படுத்துவதும், குஜராத்தில் முசுலீம் மக்களை இனப்படுகொலை செய்த இந்து மதவெறியர்கள் அதனால் பெருமிதம் பொங்கப் பேசுவதும், ஈழத்தமிழர்களை வேட்டையாடும் சிங்கள அதிபர், புத்தரைத் தொழுவதும், பாகிஸ்தானில் நாளுக்கொரு தடவை குண்டை வெடித்து மக்களைக் கொலைசெய்யும் மதத்தீவிரவாதிகள் அதனை இசுலாத்தின் பெயரால் செய்வதும்தான், இம்மதங்களின் இன்றைய யோக்கியதை.

'இவையெல்லாம் மதங்களின் தவறல்ல, மனிதர்களின் தவறு' என்றொரு சொத்தை வாதத்தை முன்வைக்கலாம். ஆனால் நீதியான, நேர்மையான மதம் என்பது வரலாற்றில் எப்போதும் இருந்ததில்லை. நீதியும், நேர்மையும் சமூக மாற்றத்தினால் காலந்தோறும் தீர்மானிக்கப்படுகிறது. அது மாறக்கூடியது. பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய மதச் சீர்திருத்தவாதிகள், சிக்கலான இன்றைய வாழ்க்கையின் ஒரு துரும்பைக்கூட கற்பனை செய்திருக்க முடியாது.

அன்றைய அரேபியாவில், செல்வமென ஒட்டகங்களும், குதிரைகளும், அடிமை மனிதர்களும் இருந்தார்கள். குர் ஆன், ஷரியத், ஹதிஸ் ஆகியவற்றினுடைய அறிவின் வரம்பு அன்றைய சமூக வளர்ச்சி நிலையைத் தாண்டவில்லை. அதாவது நபிகளின் அரசியல், சமூக, பொருளாதார வாழ்க்கை குறித்த கண்ணோட்டம் இவற்றைத் தாண்டவில்லை. தாண்டியிருக்கவும் முடியாது. ஆனால், இன்றைக்கு 'எண்ணெய்'தான் அரேபியாவின் செல்வம் என்றாகி விட்டது.

19-ஆம் நூற்றாண்டிலிருந்து இன்று வரையிலும் ஏகாதிபத்தியங்கள் வளைகுடா நாடுகளை ஆதிக்கம் செய்வதும், போர் புரிவதும் எண்ணெயின் பொருட்டுத்தான். அரபுநாடுகளின் ஷேக்குகள் ஆடம்பர, களியாட்டத்தில் திளைப்பதற்கும், ஜனநாயகம் வழங்காமல் சர்வாதிகாரத்தை தொடர்வதற்கும், பன்னாட்டு நிறுவனங்களுடன் சேர்ந்து கொண்டு, பெட்ரோல் விலையை உயர்த்தி ஏழை நாடுகளைக் கொள்ளையடிப்பதற்கும் என்ன காரணம்? அளவற்ற அருளாளனான இறைவன், இந்த எண்ணெய் பிரச்சினை குறித்து, நபிகளிடம் ஏன் முன்னறிந்து சொல்லவில்லை?

உண்மையில் இசுலாமிய மதவாதிகள், பெண்களை அடிமைப்படுத்துவது பற்றிய பிரச்சினைகளை வைத்தே, தங்களது மதத்தின் மகத்துவத்தை கட்டியமைக்க முடியும், என்று பிடிவாதத்துடன் கருதுகிறார்கள். இதைத்தான் தஸ்லிமா எதிர்க்கிறார். பொதுவாக எல்லா மதங்களும் பெண்களை ஆதிக்கம் செய்வதைத் தங்களது புனிதக் கடமையாகக் கொண்டிருந்தாலும், இசுலாமிய மதவாதிகள் மட்டும் இதில் விசேட அக்கறை செலுத்துகின்றனர்.

80-களில் நடந்த ஷாபானு பிரச்சினையை எடுத்துக்கொள்வோம். வயதான காலத்தில் 'முத்தலாக்' என்ற எளிமையான முறையில் தன்னை விவாகரத்து செய்த கணவனிடமிருந்து, ஜீவனாம்சம் பெறுவதற்காக உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் ஷாபானு. அவருக்கு ஆதரவாக தீர்ப்பு வந்தவுடன், இசுலாமிய மதவாதிகள் நாடெங்கும் போராட்டம் நடத்தினார்கள். அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியும் உடனே 'ஷரியத்' சட்டத்தையும் நீதிமன்றத்தையும் கொண்டு வந்தார்.

'ஷரியத்' சட்டப்படி ஜீவனாம்சம் வழங்கத் தேவையில்லை. இப்படி ஆணாதிக்கத்தின் உச்சமான முத்தலாக்கின் மூலம் வாழ்வை இழக்கும் அப்பாவி முசுலீம் பெண்களுக்கு நீதிமன்றத்தில் கூட நீதி கிடைக்க முடியாமல் கதவை அடைத்தார்கள். ஏழாம் நூற்றாண்டு ஷரியத் விளக்கப்படி இன்று ஒரு பெண்ணை துன்புறுத்துவது காட்டுமிராண்டித்தனமில்லையா?



படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் பர்தா அணிய வேண்டும், மசூதிகளில் தொழுவதற்கு அனுமதியில்லை, முத்தலாக்கில் பாதிக்கப்படுவதும் பெண்கள், கணவன் நான்கு மனைவிகளை மணம் செய்தாலும் அதைச் சகித்துக் கொள்ள வேண்டும்.... இவற்றையெல் லாம்தானே தஸ்லிமா எதிர்த்தார். பொதுவில் மனிதநேயம் கொண்ட எவரும் எதிர்க்கத்தான் செய்வார்கள். ஆனால் முசுலீம் மதவாதிகள் மட்டும் பெண்களை வீட்டு நாயைப் போல நடத்துவதற்கு, மதத்தின் பெயரால் தங் களுக்கு அளிக்கப்பட்ட அதிகா ரங்களை விட்டுவிட மறுக்கிறார்கள். பெண்களை அடக்கி ஒடுக்குவதுதான் இசுலாத்தின் வீரம் போலும்.

சென்ற ஆண்டு பாளையங்கோட் டையில் இத்தகைய அடக்குமுறைக ளுக்கெதிராக இசுலாமிய பெண்கள் அமைப்பொன்று போராடிய போது, முசுலீம் அமைப்புகளைச் சேர்ந்த ஆண்கள் பலர் அங்கு சென்று மிரட்டி னார்கள். மேலப்பாளையத்திலும், கோவையிலும் மூன்று முசுலீம் பெண்கள் 'விபச்சாரிகள், கள்ள உறவு வைத்திருந்தனர்' என்று குற்றம் சாட்டப் பட்டு முசுலீம் மதவெறியர்களால் கோழிகளைப் போல அறுத்து கொல் லப்பட்டனர். இத்தகைய கொடூ ரங்களை மதத்தின் பெயரால் பெரும் பாலான இசுலாமிய ஆண்கள் நியாயப் படுத்துகிறார்கள். இது குஜராத்தில் முசுலீம் மக்களை இனப்படுகொலை செய்த இந்து மதவெறியர்களை பெரும்பாலான இந்துக்கள் அங்கீகரித் தற்கு ஒப்பானது. அதிலும் கொலை செய்யப்பட்ட அந்தப்பெண்கள் இந்து ஆண்களுடன் உறவு வைத்திருந் தார்கள் என்ற குற்றச்சாட்டும் உண்டு. இதையே முசுலீம் ஆண்கள் செய்தி ருந்தால், அந்தப் பெண்கள் பிழைத்தி ருக்கக்கூடும். பெண்களுக்கு எதிரான இசுலாமிய பயங்கரவாதம் இப்ப டித்தான் இருக்கிறது.

ஆனால் இத்தகைய பாலியல் வக்கி ரங்களில் மூழ்கித் திளைக்கும் ஆண்களை மட்டும் இசுலாம் அனும திக்கும். ஹைதராபாத் நகரைச் சேர்ந்த ஆமினாவை 80 வயது அரபு ஷேக் 'திருமணம்' என்ற பெயரில் பாலியல் வன்முறை செய்ததற்காக அந்தக் கிழட்டு நாயை இசுலாம் தண்டிக்க வில்லை. உண்மையில் இசுலாமிய சட்டம் அதை அனுமதிக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர், பிலிப்பைன்சைச் சேர்ந்த சாரா பென் என்ற சிறுமி, வளைகுடாவிற்கு வேலைக்குச் சென்றாள். அங்கு தன்னை கற்பழித்துக் குதறிய எஜமா னனான ஷேக்கை பொறுக்கமுடியாமல் குத்திக்கொன்றாள். மனித குலம் பெரு மையடையக்கூடிய இந்தச் செயலை குவைத் நீதிமன்றம் ஏற்கவில்லை. மாறாக, அந்த இளம் சிறுமிக்கு தூக்கு தண்டனை விதித்தது. இதுதான் நபிகள் நாயகத்தின் வழிவந்த இசுலாத்தின் தருமம். இதைத்தான் அதருமம் என்று தஸ்லீமா போராடிவருகிறார்.

இத்தகைய போராட்டத்தில் தசுலிமா போன்ற பெண்களை பாது காப்பது, மதச்சார்பற்ற ஜனநாயக சக்தி களின் கடமையாகும். ஆனால் போலிக் கம்யூனிஸ்டுகளான சி.பி.எம் கட்சி இதிலும் துரோகம் இழைத்திருக் கிறது. தஸ்லிமாவை நாடுகடத்த வேண்டும் என்ற போராட்டத்திற்கு பிறகு, அவரைக் கல்கத்தாவை விட்டே வெளியேற்றியது. மேலும், 'அவரை இந்தியாவில் தங்க வைத்திருப்பது மத்திய அரசின் கடமை' என்று கைகழு வியது. இந்த துரோகத்திற்குள், மற் றுமொரு மோசடியும் அடங்கியிருக் கிறது.

> குர்ஆன் உள்ளிட்ட அனைத்து மதநூல்களும் காலப்பொருத்தமற்றவை என்றும், அவை காலாவதி யாகிவிட்டன என்றும், தான் பிறந்த இசுலாம் மதம் எப்படி பெண்களை அடிமைப்படுத்துகிறது? என்பதையும் விரிவாகப் பேசியும் எழுதியும் வரும் தஸ்லிமா, மதங்களுக்குப் பதில் நாம் மனித நேயத்தையே புதிய நம்பிக்கையாகக் கொள்ள வேண்டும் என்கிறார்.

கல்கத்தா நகரில் தஸ்லிமாவுக்கு எதிராகப் போராடிய முசுலீம் மக்கள், நந்திகிராம் பிரச்சினையில் சி.பி.எம் அரசின் அடக்குமுறையை எதிர்த்தும் அணிதிரண்டார்கள். ஏனெனில் நந்தி கிராம் பகுதி விவசாயிகளில் இசு லாமிய மக்கள்தான் அதிகம். ஒன்று வாழ்க்கைப் பிரச்சினை. மற்றொன்று மதப் பிரச்சினை. நந்திகிராமில் அவர்களை ஈவுஇரக்கமின்றி அடக்கிய மேற்குவங்க அரசு, தஸ்லீமாவை வெளியேற்றவேண்டும் என்ற கோரிக்கையை மட்டும் ஏற்றுக் கொண்டது. இதுதான் அந்த மோசடி. இந்த சூட்சமத்தை அறியாத அளவுக்கு இசுலாமிய மக்களை மத உணர்வு ஆட் கொண்டிருக்கிறது என்றால் என்ன செய்வது?

'தஸ்லீமாவை ஆதரிக்கும் மதச்சார் பற்ற, ஜனநாயக, புரட்சிகர சக்தி கள்தான் நந்திகிராம் விவசாயிகளை ஆதரிக்கிறார்கள்' என்பதை அம் மக்கள் புரிந்து கொள்ளவில்லை. இதனால் தனிமைப்படுவது யார்? இங்கே வர்க்கக்கோரிக்கையின் நியா யத்தை மத உணர்ச்சி அடித்துச் சென்று விட்டதுதான் கவலைக்குரியது.

இந்தக் கவலையில் மற்றுமொரு அவலமும் சேர்ந்திருக்கிறது. எல்லோ ராலும் கைவிடப்பட்ட தஸ்லிமாவை குஜராத்தில் தங்க வைத்து அடைக்கலம் கொடுப்பதாக நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருக்கிறார். இந்து மத வெறித் தாண்டவங்களில் சாதனை படைத்திருக்கும் தளபதி, எதிரிக்கு எதிரி என்ற முறையில் மட்டுமல்ல முசுலீம் அமைப்புக்களை சீண்டுவதற் காகவும், அல்லது பயங்கரவாதத்திற்கு எதிரான தனது போரின் ஒரு பகுதியா கக்கூட இந்த அழைப்பை விடுத்திருக் கலாம்.

தஸ்லிமாவுக்கு 'ஃபத்வா' அறி வித்த இசுலாமிய மதவாதிகள் மோடியை என்ன செய்வார்கள்? ஒன்றும் செய்யமுடியாது என்பதே உண்மை. அப்பாவிப் பெண்ணை எதிர்ப்பதில் துருத்தும் வீரம் இங்கே இயல்பாக ஒளிந்து கொள்ளும். இந்தச் சரணடைதலில் 2000 முசுலீம் மக் களின் களப்பலி கண்முன்னே எழுந்து மறைகிறது. இந்தத் துயரத்தின் பரிமா ணத்தை உணர்ந்து கொள்ளும் இசு லாமிய இளைஞர்களும், பெண்களும் இசுலாமிய மதவாதத்திலிருந்து வெளியேற வேண்டும். அப்போ துதான் நாம் மோடியையும், இசு லாத்தில் இருக்கும் மோசடிகளையும் சேர்த்துத் தண்டிக்க முடியும்.

● இளநம்பி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN / CCN / 84 / '06-'08

# பாலஸ்தீனியன்..நான்

யாரும் பறித்துவிட முடியாது என்னிடமிருந்து
என் அடையாளத்தை.
ஏனெனில் அது என்னுடையது.

நான் பாலஸ்தீனியன்.
என் மண்ணில் பெருகும் ஆறு நான்.
குழப்பங்களிலிருந்தும் அழிவுகளிலிருந்தும்
திமிறி நிமிர்ந்து நிற்கும் கம்பீரமான மலை நான்.

என் வளமை சூழ் பள்ளத்தாக்குகளில் ஒளிர்ந்து
என் வறண்ட பாலைகளை வாட்டும்
காலைச் சூரியனை எதிர்கொண்டு
அழைக்கிறேன் நான்.

இரத்தக்கறை படிந்த என் மலைகளில்
முகிழ்க்கும்
செந்நிறக் கஞ்சாப்பூவும் மஞ்சள் மலரும் நான்.
என் தாழ்வாரங்களில் எதிரொலித்து
என் இருப்பின் ஒவ்வோர் இழையிலும் அதிரும்
சுதந்திரப் போர் முழக்கம் நான்.

பாலஸ்தீனியன் நான்.
ஆரஞ்சுத் தோட்டங்கள் எலுமிச்சை மலர்கள்
சுதந்திரத்தை ரீங்கரிக்கும் காட்டுத்தேனீக்கள்
இவற்றின் பெருமைமிகு உரிமையாளன் நான்.

நான்தான் அந்த பாலஸ்தீனியன்.
இஸ்ரேல் எனும் கோலியாத்தை எதிர்கொண்டு
கல் ஏந்தி நிற்கும் டேவிட் நான்.
உண்மை என் பக்கம் கடவுள் என் பக்கம்
அச்சமில்லாதவன் நான்.

இறப்பேனாகில்,
தேவதைகளின் கீதம் என்னைக் கவுரவிக்கும்
பிறிதொரு நாள்
நீண்டு காத்திருக்கும் என் கரங்களைப் பற்றி
என்னுடன் சொர்க்கத்தில் இணைவர்
என் பெற்றோர்.
கண்ணீர் நான்.
பறி கொடுத்த பிள்ளைகளை எண்ணி
விசும்பும் தாய்மார்களின் கண்ணீர் நான்.
எம்மைத் துன்புறுத்தி நசுக்குவோர்
காணவிருக்கும் பேரழிவை
முன்னறிந்து சொன்ன தீர்க்கதரிசிகளின்
காலடித்தடம் நான்.

என் கடற்பரப்பின் மீது சுதந்திரமாய் நீந்தும்
புறாக்களும் இசைப்பறவைகளும்
கடல்நாரைகளும் என் சோதரர்கள்.
நான் பாலஸ்தீனியன்,
எனவே, நான்.

இழிவுசெய்து என்னைக் கொல்ல வரும்
டாங்கிகள், துப்பாக்கிகள், குண்டுகள்
எதுவும் யாரும்,
என் அடையாளத்தைப் பறிக்கவே முடியாது.
என்னில் வாழ்கிறது என் தேசம்.

சுதந்திரத்தின் முழக்கம் நான்.
எதை வேண்டுமானாலும்
அவர்கள் பறித்துக் கொள்ளட்டும்,
என் அடையாளத்தைப் பறிக்க முடியாது.
என் கவுரவத்தைப் பறிக்க முடியாது.
பாலஸ்தீனியன் நான்.

இ.யாகி.



படிப்பகம்